UNIVERSITY LIBRARY 2 AUG 2001 PERIODICALS DIVISION

REGISTERED AS A CATHOLIC WEEKLY (P.197) ESTABLISHED 19 FEB. 1876

# பாதுகாவலன்

PATHUKAVALN

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு

மலர் 125
இதழ் 06
மே 31-05-2001
பக்கங்கள் 12
விலை ரூ.5

## ● வன்னி விழாக் கோலம்! ● புதுக்குடியிருப்பில் கொண்டாட்டம்!! ● 25க்கு அதிக குருக்கள்! ● ஏராளமான இறைமக்கள்!!

# மில்லேனியக் குருக்களில் ஒருவருக்கு குருப்பட்டம்

மே 26ம் திகதி புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலயத்தில் இறைமக்கள் வெள்ளம் சூழுமி நிற்க வசாவிளைனைப் பிறப்பிடமாகவும் சுதந்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருவாளர் அருள்ராஜ் ஜோண் தம்பதிகளின் புதல்வன் அருள்சகோதரன் ஜெயசீலன் குருவாக யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகையால் குருவாகத் திருநிலைப்படுத்தப் பட்டார்.

25க்கு அதிக குருக்களும் அருட் சகோதரிகளும் ஏராளமான இறைமக்களும் கூடிநின்ற இக் குருப்பட்டம் அளிக்கும் நிகழ்விலே எஸ். ஞானராஜா அடிகள் விளக்கவுரையை வழங்க பிரான்சிஸ் அடிகளின் வழிநடத்தலில் இசைக்குழுவினர் பாடல்கள் இசைத்து பக்தி பரவசமூட்ட குருப்பட்டம் அளிக்கும் நிகழ்வு இனிதே நிறைவேறியது. புனித சூசையப்பர் ஆலய பங்குத்தந்தை யாவிஸ் அடிகள் அனைத்து ஒழுங்குகளையும் சிறப்பாக செய்து விழாவிற்கு மேலும் மெரு கூட்டினார். புதிய குரவர் சுதந்திரபுரத்தில் இருக்கும் புனித யூதாதேயு ஆலயத்தில் 28ம் திகதி தமது முதல் திருப்பலியை நிறைவேற்றினார். இந் நிகழ்வுகள் போரின் கொடூரத்தின் மத்தியில் பல் வேறுபட்ட இழப்புக்களின் நடுவில் மனதாலும் உளத்தாலும் வேதனையையும் சோர்வையையும் அனுபவித்த மக்களுக்கு ஆறுதலையும் மனமகிழ்வையும் இறையருளையும் கொடுக்கும் நிகழ்வாக அமைந்திருந்தது.

புதிய குரவர் தம் பணிகளை ஆரம்பிப்பதற்காக உடனேயே யாழ். திரும்பவுள்ளார்.



## ''யாழ் ஜெயம்''

ஆள்பவன் கவிதையினை யாழ் ஜெயம் என்று சொன்னால்
ஆரிங்கு மறுப்பதற்கு அனைவரும் ஒப்புக் கொள்வர்
ஆண்டவன் பேரிலென்ன? அருளாளர் பேரிலென்ன?
வேண்டிய கருப்பொருளில் கணத்தினில் எழுதித் தள்ளி
ஆவலைப் பூர்த்திசெய்யும் அன்பாளன் அமுதகவி
காவலன் கவிஞன் அவன் கலாமன்றக் கலைஞன் அவன்
நேயரின் நெஞ்சங்களில் நிலைத்தே குடியிருப்பான்
வெற்றியைத் தன் பெயராய்க் கொண்டவன் - கலைக்கே தன்னை
முற்றிலும் தந்தவன் அவன்தான் ''யாழ் ஜெயம்''

நவாலியூர் நாயகி

## ஆயர் பார்த்த வீடியோ படம்

மருதமடு அன்னையின் கிளி.–முல்லை. மறைக்கோட்ட சமாதானப் பவனியின்போது மக்கள் பக்தி வெள்ளத்தில் நின்ற காட்சியும் தங்கள் துக்கம் தாங்காமல் அன்னையின் பாதத்தில் பெருமூச்சுவிட்டு அழுத கோலமும் மனவேதனையோடு தம் குற்றங்களையும் குறைகளையும் அன்னையிடம் சொல்லி ஆறுதலும் அருளும் வேண்டி நின்ற காட்சியும் மிகவும் தத்ரூபமாக வீடியோப் படப்பிடிப்பு செய்யப்பட்டிருந்தது. அவ் வீடியோப் படத்தினை அருள்தந்தை யாவிஸ் தமக்கு காட்டியதாகவும் ஆயர் தெரிவித்தார்.

## 'பாதுகாவலனுக்கு' தேசிய விருது!

சிறந்த வடிவமைப்பிற்கான தேசிய விருதினை அண்மையில் பாதுகாவலன் பத்திரிகை பெற்றுக்கொண்டது என்ற மகிழ்ச்சிமிக்க செய்தியை பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களோடு பகிர்ந்துகொள்கிறோம்.

இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தினால் சிறந்த பத்திரிகையாளர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கும் விழா மே மாதம் 15ம் திகதி மவுண் லேவனியா ஹொட்டலில் நடைபெற்றபோதே சிறந்த வடிவமைப்புக் கொண்ட தமிழ்ப் பத்திரிகைக்கான தேசிய விருதினை பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியர் பெற்றுக்கொண்டார். இப் பரிசினைப் பெற்றுக்கொள்ள கொழும்பு செல்வதற்கு ஒரே நாளில் ஒழுங்குகளை மேற்கொண்ட குருமுதல்வர் ஜே.பி.ஈ. செல்வராஜா அடிகள் என்றும் நன்றிக்குரியவர்.

இப் பரிசினை எமது திறமையால் நாம் பெற்றுக்கொண்டதாக ஒருபோதும் கருதவில்லை. பாதுகாவலன் அன்பு நெஞ்சங்கள் பலரின் அன்பான வார்த்தைகளும் வழிகாட்டல்களுமே இதற்கு வழிவகுத்தது. இதன் முழு உரிமையினையும் பெருமையையும் வாசக அன்பர்களுக்கே நாம் வழங்குகிறோம். குறிப்பாக அறிவுரைகளையும், அன்புரைகளையும் நேரிலும் கடிதமூலமும் அவ்வப்போது வழங்கி பாதுகாவலன் வளர வழிகாட்டிய ஆயர், குருக்கள், கன்னியர், துறவிகள், பொதுநிலையினர் ஆகிய வாசக அன்பர்கள் அனைவரையும் அன்புடன் நினைவுகூர்ந்து நன்றியினைத் தெரிவிக்கின்றோம்.

பாதுகாவலனின் 125வது ஆண்டு நிறைவில் இப் பரிசினை நாம் பெற்றுக்கொண்டது எமது மகிழ்ச்சியை இரட்டிப்பாக்குகிறது. எமக்கு வாழ்த்துக்களை நேரடியாகவும், தொலைபேசி மூலமாகவும், கடிதம் வழியாகவும் தெரிவித்த அனைவருக்கும் அன்பான நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

பாதுகாவலன் என்றும் உங்கள் பத்திரிகை. அது சிறப்புற வளர முழுமூச்சுடன் தொடர்ந்தும் உழைப்போம். அதன் வளர்ச்சியும் எழுச்சியும் உங்களதே.

*படங்கள் 2ம் பக்கத்தில்*

## அ.ம.தி.களின் சிரேஷ்ட முதல்வர் இலங்கைக்கு

அகில உலக அமலமரித் தியாகிகளின் சிரேஷ்ட முதல்வர் அருள்திரு வில்ஹெம் ஸ்ரெக்லிங் (Wilhelm Steckling) அடிகளார் ஜூன் 28ம் திகதி முதல் ஜூலை 10ம் திகதி வரை வவுனியா, மடு, கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கும் அவர் விஜயம் செய்யவுள்ளார்.

6ம் திகதி முதல் 10ம் திகதி வரையிலான அவரது யாழ். விஜயம் பற்றிய பாதுகாவலனின் சிறப்பு மலர் அடுத்த இதழில் வெளிவரும்.

## கல்விப் பணியில் 25 ஆண்டுகள்



கடந்த 25 வருடங்களாக இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் கல்விப்பணி பணிபுரிந்து வெள்ளி விழாக் காணும் யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் அடிகளாரை பாதுகாவலன் அன்பு நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்துகிறோம். தொடர்பணி சிறக்க இறையாசீர் வேண்டுகிறோம். *அடிகளாருடனான சிறப்புப் பேட்டி 10ம் பக்கத்தில்.*

## மறையாசிரியர்களுக்கு அ,ஆ,இ,ஈ தெரியவேண்டும்
## சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் யாழ். ஆயர்

யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி நிலையத்தில் 3மாத கால பயிற்சிநெறியை முடித்து சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் விசேட அதிதியாகக் கலந்துகொண்ட யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை மேற்கண்டவாறு தெரிவித்தார். மறையாசிரியர்களாக பங்குகளில் பணியாற்ற பயிற்சி பெறுபவர்கள் முதலில் அ, ஆ, இ, ஈ பற்றி அறிந்திருக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

அ – என்றால் [illegible] ஆ – என்றால் ஆற்றல், இ – என்றால் இயேசு, ஈ – என்றால் ஈடுபாடு. இவையனைத்தையும் ஒருங்கிணைத்து பங்குப் பணியில் செயல்படுத்தும்போதுதான் முழுமையான வெற்றியை காண முடியும் என அவர் தெரிவித்தார்.

பங்குபற்றிய மாணவர்கள் தம் அறிக்கையை சமர்ப்பிக்கும் போது நாம் எம் பயிற்சிகாலத்தில் சொல்லிலடங்கா அனுபவங்கள் ஊடாக மறைதூதுவர்க [illegible] பங்குத்தந்தையர்களினதும் பங்கு மக்களதும் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவோம் எனத் தெரிவித்தனர்.

மறைக்கல்வி நிலைய இயக்குனர் ஆர்.சி.எக்ஸ். நேசராஜா அடிகள் தமது அறிக்கையில் ஆண்டவர் இவர்களிடத்தில் மறையாசிரியர்களுக்கான வேலையை தொடங்கிவிட்டார் என்று சொன்னால் மிகையில்லை என நினைக்கிறேன் என்று கூறி உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

## பலாலி ஆசிரிய கலாசாலையில் 52 பேர்

பலாலி ஆசிரிய கலாசாலையில் றோமன் கத்தோலிக்கத்தை விசேட பாடமாகக் கற்பதற்கு 52 ஆசிரிய மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுள் 37 பேர் யாழ். மாவட்டத்திலிருந்தும் 15 பேர் ஏனைய மாவட்டங்களிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இலங்கை ஆசிரிய கலாசாலைகளுக்குள் பலாலி ஆசிரிய கலாசாலையிலேயே றோ.க. நெறியில் தமிழ்ப் பிரிவு உள்ளது. கடந்தகாலத்துடன் ஒப்பிடுகையில் இந்த தடவை அநேகர் இந்நெறிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கான விரிவுரைகள் 15.06.2001 அன்று ஆரம்பமாகின்றன என றோ.க. நெறி பீடத் தலைவர் திரு ரி. திருஞானம் அவர்கள் தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் கருத்து

### பாதுகாவலன் பத்திரிகையின் 125வது ஆண்டு

பாதுகாவலனின் 125வது ஆண்டு பற்றிய செய்தி யாருக்கும் புதியதே அல்ல. மிகநீண்ட காலமாகவே நாம் இதுபற்றி அறிவித்தும் ஆயத்தம் செய்தும் கொண்டுவந்திருக்கிறோம்.

எமது பத்திரிகையின் பெருமையை நாமே அறிவிப்பதாக இருந்தாலும் அது பொதுவானதும் பொருத்தமானதும் என்றே கருதுகிறோம்.

ஒரு பத்திரிகையின் 125 ஆண்டுகள் என்பது உண்மையாகவே ஒரு சாதனைமிக்க நிகழ்வு. ஒரு நிறுவன அமைப்பை, கொள்கைப் பின்னணியை அல்லது சமயப் பின்புலத்தை களமாகக் கொண்ட ஒரு பொது நிறுவனத்தாலேயே இது பெரும்பாலும் சாத்தியமாகும். இன்றைய பத்திரிகை உலக சவால்களுக்கும் நெருக்கீடுகளுக்கும் இடையில் மற்றவர்களால் இச்சாதனை நிறைவேற்றுவது என்பது கடிமானதாகும்.

பாதுகாவலன் பத்திரிகையின் 125 ஆண்டுகள் நிறைவின்ன ஏதோவொரு வகையில் கொண்டாட இன்றைய இடர்பாடுகள் மத்தியிலும் எமக்கு சந்தர்ப்பம் கிடைத்தது பாக்கியம் என்றே கருதுகிறோம். இந்த சந்தர்ப்பத்தை நாம் வெறும் கொண்டாட நிகழ்வாக அமைக்க விரும்பவில்லை. கடந்துவந்த பாதுகாவலனின் பயணப் பாதையை சற்று திரும்பிப் பார்க்கவும் இனறைய நிலையில் நின்று எம் எதிர்கால இருப்பிற்கு திட்டமிடவும் தீர்மானங்கள் பல செய்யவும் எம் வளர்ச்சியையும் பணியையும் இன்னும் ஆழமாக்கி அகலமாக்கவும் உரியதொரு சந்தர்ப்பமாகவே இதனை அமைக்க விரும்புகிறோம்.

இந்த எம் ஆசிரியத் தலையங்கத்தில் படிப்படியாக இது பற்றி அலசவும் ஆராயவும் தொடங்கும் முதலாவது பகுதி இதுவாகும்.

நீணடகால சரித்திரத்தையும் பாரம்பரியத்தையும் கொண்டுள்ள இப் பத்திரிகை பல சரித்திர மைல்கற்களைத் தாண்டி வந்துள்ளது. அமைதியாக நிதானமாக பல சாதனைகளை நிறைவேற்றியுள்ளது. பல தடைகளையும் தாக்கங்களையும் தகர்த்தெறிந்து நடைபயின்றுள்ளது. பலரின் ஆற்றல்களிலும் ஆளுமைகளிலும் எழுத்துக்களிலும் ஏற்றப் பணிகளிலும் விழுதுகளைப் பாய்ச்சி வளர்ந்து பரந்துள்ளது. சமய சம்பிரதாயங்களையும் விசுவாச வாழ்வையும் கட்டியெழுப்புவதற்கு பல படிகளை ஏறிக் கடந்துள்ளது. மண்ணோடும் மக்களோடும் ஒட்டி வளர்ந்தபடியால் அவர்களின் ஏக்கங்களிலும் எதிர்பார்ப்புகளிலும் இடர்களிலும் இடம்பெயர்வுகளிலும் பங்கெடுத்துள்ளது.

பத்திரிகையின் இன்றைய நிலையினை ஆராயும்போது இதன் தரத்தினை எம்மால் இயன்றவரை பேண முடியுமாகவிருந்தாலும் இதன் விற்பனையிலும் விநியோகத்திலும் பெரும் பின்னடைவையே நாம் அடைந்துகொண்டிருக்கிறோம் என்பது வருத்தத்திற்குரியதாகும்.

# கிளி.-முல்லை. மறைக்கோட்டத்தில் மருதமடு அன்னையின் அருள்மாரி


## பத்தாவின் பதியில் பரமனின் தாயார்



**இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் உத்தியோக பூர்வ தேசிய நிகழ்வான மருதமடு அன்னையின் தென்னிலங்கைக்கான சமாதானப் பவனியின் இறுதிக்கட்டம் கிளி.-முல்லை. மறைக்கோட்டத்தில் ஏப்ரல் 4ம், 5ம், 6ம், 7ம் திகதிகளில் வெகு சிறப்பாக நடைபெற்றது. 3.4.2001 அன்று *ஈழநாதம்* பத்திரிகையில் ஒருபக்க சிறப்பிதழ் வெளியிடப்பட்டது.**

**புதுக்குடியிருப்பு பங்கில் மடு அன்னையின் திருசுருபப் பவனி பற்றிய விளக்கங்களையும் படங்களையும் பங்குத்தந்தை ஏ. ஜாவிஸ் அடிகளார் எமக்கு அனுப்பிவைத்துள்ளார். நன்றியோடு அவற்றை பிரசுரிக்கிறோம்.**

**(ஆர்)**



**புதுக்குடியிருப்பு பங்கில் கிளி.-முல்லை. மறைக்கோட்ட முதல்வர் தேவசகாயம் அடிகள் தலைமையில் திருப்பலி.**



**பங்குத்தந்தை அருள்ஜாவிஸ் அடிகளார் மருதமடு அன்னையின் ஆசீர் வழங்குகிறார்.**




இயற்கை எழில் கொஞ்சும் இலங்கைத் திருநாட்டின் வடபுலத்தில் அமைந்துள்ள மருதமடுத் திருப்பதியை, அங்கு கோவில் கொண்டெழுந்தருளி அண்டிவரும் அனைவருக்கும், அபயமளித்துவரும் மடுமாதாவை மனுமகனின் தாயாரை அறியாதார் எவருமிலர். கரடி, புலி வாழும் கானகத்தின் நடுவே வீற்றிருந்து கருணை மழை பொழியும் அந்தத் தாயின் சந்நிதானத்தில் இன, மத வேறுபாடுகளின்றி, பெருந்திரளாகக் கூடிநின்று தங்கள் துயரங்களை வாய்விட்டு அழுது முறையிட்டு, நிறைவுபெற்ற மனதுடன் மக்கள் தங்கள் இல்லிடங்களுக்குத் திரும்பிய காலம் ஒன்று இருந்தது. ஆனால், இப்போது அந்த நிலை இல்லை. இந்தப் பகுதிகளில் போர் மேகம் கவிந்துள்ளதால், அடியார்களின் யாத்திரையும் அருள் வேண்டலும் தடைப்பட்டுள்ளது. போர்ச் சூழலும் அதன் துன்பங்களும் முடிவின்றித் தொடர்வதால், அந்நிலையை மாற்றியமைக்கவும், தன்னைத் தரிசிக்க வருபவர்களுக்கு தன்னைத் தரிசனையாக்கவும் சித்தம் கொண்டு சமாதானத்தின் இராக்கினியாக, நாட்டின் தென்பகுதிகளுக்கான திருப்பயணத்தை மேற்கொண்டு, பல இடங்களையும் மக்களையும் தரிசித்து சமாதானச் செய்தியை அறிவித்துவிட்டு வன்னிப் பெருநிலப் பரப்பில் துன்பப்படும் மக்களை தரிசித்து ஆறுதல் கூறும் நோக்குடன் சித்திரை 4–7ந் திகதி வரையான காலப்பகுதியில் யாழ். மறைமாவட்ட கிளி.–முல்லை. மறைக்கோட்ட பகுதிக்கு வருகைதந்த அன்னையை கிளி.–முல்லை. மறைக்கோட்ட முதல்வர் ஏ.பி. தேவசகாயம் அடிகள் வரவேற்றார். அவரது தலைமையில் பல இடங்களையும் அன்னை தரிசித்தாள். சித்திரை 5ந் திகதி பி.ப. 4.00 மணிக்கு புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலயப் பகுதிக்கு திருச்சுரூபம் வந்தபோது, அங்கு இன,மத பேதமின்றிக் கூடி நின்ற *மக்கள் மரியே வாழ்க! அன்னையே வருக!* என வாழ்த்தி வரவேற்றார்கள். ஆலயப் பங்குத்தந்தை அருள்ஜாவிஸ் அடிகளார் அன்னையின் திருசுரூபத்தை கையேற்று ஆலயத்திலே கொலுவேற்றி ஆசார வழிபாடு நடாத்தினார். 6ந் திகதி அதிகாலை 4.30 மணிவரை திருவிழிப்பு ஆராதனைகளும் திருச்செபமாலை வழிபாடுகளும் பக்திப் பிரவாகத்துடன் நடந்தன. தொடர்ந்து கிளி. – முல்லை. மறைக்கோட்ட முதல்வர் தேவசகாயம் அடிகள் தலைமையில் கூட்டுத்திருப்பலி இடம்பெற்றது. இதன்போது கருணாரெட்ணம் அடிகளார் மறையுரை வழங்கினார். பிரான்சிஸ் ஜோசவ் அடிகளின் திருச்சுரூப ஆசீரை தொடர்ந்து பத்தாவின் பதியிலிருந்து பரமனின் தாயார் தம் திருப்பயணத்தை தொடர புதுக்குடியிருப்பு திருச்சபை பூரிப்புடன் வழியனுப்பி வைத்தது.



**பங்குத்தந்தை மருதமடு அன்னைக்கு தூபம் காட்டும்போது.**

*தகவல்*
*பிலிப் அருளானந்தம்*



TEGOSL

ශ්‍රී ලංකා පුවත්පත් කර්තෘ වරුන්ගේ සංසදය

**The Editors Guild of Sri Lanka**

JOURNALISM AWARDS FOR EXCELLENCE – 2000

*MERIT AWARD*

*Best Designed Newspaper of the Year*

*PATHUKAVALAN*

For its presentation in the Tamil medium.

SINHA RATNATUNGA
PRESIDENT

BANDULA PADMA KUMARA
CHAIRMAN
ORGANISING COMMITTEE

**இலங்கை பத்திரிகையாளர் சங்கம்**

**2000ம் ஆண்டுக்கான பத்திரிகையியல் திறமை விருதுகள்**

திறமை விருது

வருடத்துக்கான சிறந்த வடிவமைப்புக் கொண்ட பத்திரிகை

*பாதுகாவலன்*

**தமிழ் மொழியில் அதன் பங்களிப்பிற்காக**

| | |
|---|---|
| சின்க ரட்ணதுங்க, *தலைவர்* | பந்துல பத்மகுமார, *இயக்குனர், அமைப்புக்குழு.* |

**பாதுகாவலன் பத்திரிகைக்கு வழங்கப்பட்ட சான்றிதழ் இதுவாகும்.**




**பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியர் அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை டெய்லி மிரர் பத்திரிகை ஆசிரியர் லலித் அழககோனிடமிருந்து விருதினைப் பெற்றுக்கொண்டபோது.**



**2000ம் ஆண்டின் சிறந்த பிராந்திய பத்திரிகையாளருக்கான பேராசிரியர் கே. கைலாசபதி விருது மறைந்த பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனுக்கு வழங்கப்பட்டது. இவ் விருதினை நிமலராஜனின் சகோதரி பிறேமராணி ஜெகதீஸ் திருமதி கைலாசபதியிடமிருந்து பெற்றுக் கொள்வதினை மேற்படத்தில் காணலாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமதிப்புக்குரிய ஆசிரியப் பெருந்தகை விக்ரர் மாஸ்ரர்

உயர்ந்த தோற்றம், மலர்ந்த முகம், புன்னகை புரிந்துகொண்டிருக்கும் வதனங்கள், நிமிர்ந்த நடை, பண்பாட்டு உடை, எவருக்கும் உதவுகின்ற உள்ளம், எம் மனிதரையும் மதிக்கும் மனிதநேயப் பண்பு, பண்பான வார்த்தைகள், அடக்கமான போக்கு, அமைதியான பேச்சு இவற்றையெல்லாம் ஒருங்கே கொண்டவர்தான் எமது பேரன்புக்கும், பெருமதிப்பிற்கும் உரிய பெருமகன் ஆசிரியர் அமரர் விக்ரர் மாஸ்ரர் அவர்கள்.

## அன்பான ஆசிரியர்

சுமார் 32 ஆண்டுகள் கொழும்பிலும், யாழ்ப்பாணத்தில் புனித. சாள்ஸ் மகாவித்தியாலயம், அரியாலை, ஏழாலை, யாழ். மத்திய கல்லூரி போன்ற இடங்களிலும், ஓய்வுபெற்ற பின்னர் யாழ். மாட்டீனார், புனித சூசையப்பர் அ.ம.தி. சிறிய குருமடங்களில் ஆசிரியப் பணியில் தம்மைக் கரைத்தவர். எல்லா மாணவர்களும் அவரவருக்குரிய அறிவுத்திறனுக்கும், ஆற்றலுக்கும், புத்திக்கூர்மைக்கும் ஏற்ப ஆளுமையில் வளர வேண்டியவர்களென்பதை ஒவ்வொரு மாணவனிலும் அறிந்து புரிந்து அதற்கேற்ப வழிநடத்தும் பெரும் ஆற்றலை விக்ரர் மாஸ்ரர் பெற்றிருந்தார். ஒவ்வொரு மாணவனும் இவ் ஆசிரியரை அன்பு செய்யவும், இவரால் அன்பு செய்யப்படவும் இதுவே அடிநாதமாய் அமைந்தது. தன் மாணவச் செல்வங்கள் வெற்றியடையும்போது சந்தோஷப்படுவார். தோல்வியுறும் போது தூக்கிவிடுவார், துணைநிற்பார், தோள்கொடுப்பார்.

சில ஆசிரியர்கள் பிரபல்யமான தம் மாணவர்களைச் சொல்லிப் பெருமைப்படுவர். இன்னும் சிலர் பிரசித்திபெற்ற ஒருசில மாணவர்களைக் குறிப்பிட்டுச் சிறப்படைவர். ஆனால் விக்ரர் மாஸ்ரர் இதற்கெல்லாம் அப்பாற்பட்டவர். தன்னுடைய எல்லா மாணவர்களையும் தமது *''அன்புக்குரிய பிள்ளைகள்''* என்ற பட்டியலிலே வைத்துப் பார்க்கின்ற பரந்து விரிந்த மனம் இவரிடத்தில் நிறைந்திருந்தது.

## எளிமையான மனிதர்

ஏழ்மையிலும் மகிழ்ச்சியோடு வாழ்ந்தவர். எளிமையான வாழ்வை நேசித்தவர். அதிலே இனிமையும் கண்டவர். அதனால்தான், பிற்காலத்தில் வசதிகள் வாய்ப்புக்கள் இருந்தும் கொட்டில் வீட்டில் வாழத்துடித்தவர். ''சாகும்போது, ஒரு ஓலைக் கொட்டில் வீட்டில் இறக்க இத்தனை பிள்ளைகளும் விட்டுவிட்டார்களே! என்ற உலகத்தின் விமர்சனத்திற்கு என் அன்புக் குழந்தைகள் ஆளாகக் கூடாதே!... என்பதற்காக இவ் ஓலைக் கொட்டில் வீட்டை ஓட்டு வீடாக மாற்றச் சம்மதித்தேன்'' என்று ஆசிரியர் கூறியபோது அவர் எந்த அளவிற்கு ஏழ்மையில் வாழத் துடித்தார் என்பது புரியும்.

## நீதிமானும் நேர்மையாளனும்

*''மரணம் என்பது நிச்சயம். அதற்கு எந்த நேரமும் தயாராய் இருக்கவேண்டும். ஆண்டவன் கூப்பிடும்போது ஆயத்தமாயிருக்க வேண்டும்''* என்று அடிக்கடி சொல்லுவார். எம் வாழ்வு இறைவன் முன்னிலையில் உண்மையான நேர்மையான வாழ்வாக அமையவேண்டும் என வாழ்வால் காட்டியவர்.

இவருக்குக் கோபமானவர்கள் என்று எவரும் கிடையாது. கருத்து முரண்பாடுகளைக் கொண்டிருப்பினும் உள்ளத் தூய்மையோடு இக்கட்டான சந்தர்ப்பங்களிலும் நேர்மையோடு வாழ்ந்தவர்.

மற்றவர்களின் திறமையை, ஆற்றலைப் பாராட்டுபவர், தட்டிக்கொடுப்பவர், பெருமையாகப் பேசுபவர்.

குடும்பத்தில் ஒளியாகவும், தான் வாழ்ந்த, பணிபுரிந்த சமுதாயத்தில் உப்பாகவும், கிறிஸ்தவ வாழ்வின் புளிக்காரமாகவும் இறையரசின் விழுமியங்களை நற்செய்திப் போதனையை தன் வாழ்விலே கொண்டு வாழ்ந்த ஒரு நீதிமானும் நேர்மையாளனும் ஆவார்.

## இறை நம்பிக்கையின் பக்தர்

ஆழமான விசுவாசப் பயணத்திலே பயணித்தவர். கஸ்ரங்களையும், சவால்களையும் சந்தித்தபோது மனம் தளராது கடவுள் நம்பிக்கையில் வாழ்ந்தவர். அதனால் வாழ்வைக் கண்டவர், வழியைக் கண்டவர். கடவுளை நம்பியவர்கள் எவ்வேளையிலும் கைவிடப் படுவதில்லை என்பதற்கு ஆசிரியரின் வாழ்வே ஒரு நல்ல முன்னுதாரணம்.

அடிக்கடி *''நான் கடவுளைக் கண்டேன்''* என்பார் இறப்பதற்கு முதல் நாளிலும் தம் அன்பிற்குரிய ஒருவரிடம் *''நான் கடவுளைக் கண்டேன்''* என்று கூறியிருக்கின்றார். ஏழைகள், துயருற்றவர்கள், கஸ்ரப்பட்டவர்களில் கடவுளின் சாயலைக் கண்டு கொள்வதுதான் *''நான் கடவுளைக் கண்டேன்''* என்று ஆசிரியர் கூறுவதன் உட்பொருளாகும். *''சின்னஞ்சிறிய ஒருவருக்கு இவற்றைச் செய்தபோதெல்லாம்...''* என்பதில் ஆழமான அர்த்தத்தையும், வாழ்வதின் பொருளையும் கண்டவர்.

புதுமை மாதா கோயிலுக்குச் செல்வதும், தியானிப்பதும் அவரது நேர அட்டவணையில் ஒவ்வொரு நாளும் நீண்ட நேரத்தைப் பிடிக்கும். அன்னை மரியாளின் அற்புதங்களைக் காண்பதிலும், அவற்றைக் கவியாகப் பாடுவதிலும், அவளோடு அளவளாவுவதிலும் அளவில்லா மகிழ்ச்சிகொண்டவர். அன்னை மரியின் புகழ் பாடுவதிலே இவருக்குத் தனியின்பம்.

## மனிதநேயப் பண்பாளர்

தான் காணுகின்ற, தன்னைக் காண வருகின்ற அனைவரையும் மனித மாண்போடும், மரியாதையோடும் பார்க்கின்ற பண்பாளன். அவருடைய வீட்டிற்கு யார் சென்றாலும் *''வாருங்கள், அமருங்கள்''* என்று வாயார, மனதார, நெஞ்சார வந்தாரை வரவேற்று விருந்தோம்பி வழியனுப்பும் பண்பாளர். அது பாட்டெழுத வந்தவராக இருந்தாலென்ன, தன்னைக் காண வந்த ஒருவராயிருந்தாலென்ன, கற்ற மாணவன் என்றாலென்ன, உற்ற நண்பனாகவிருந்தாலென்ன, அல்லது உதவிகேட்டு வந்து படலையைத் தட்டும் ஏழையாக இருந்தாலென்ன எல்லோரையும் வரவேற்று உபசரித்து வந்த விடயம் முடித்து வழியனுப்புவார். கற்றோர்–கல்லாதோர், உள்ளவன் – இல்லாதவன் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோருடனும் பரஸ்பரமாகப் பழகும் மனிதநேயம் நிறைந்த பண்பாளர்.

## நாடறிந்த கவிஞர்

சொல்லிலே இலக்கிய நயம் சொட்டவும், பக்தி நயம் கொட்டவும் கவிதை பாடும் கவிஞர். ஆழமான தமிழறிவையும், அனுபவங்களையும், ஆன்மீகத்தையும் கொண்டு விளங்கியவர். இவை அவருடைய தித்திக்கும் கவிதைகளில் பிரதிபலிக்கும். ஏறத்தாழ 52 ஆண்டுகள் இலக்கியப் பணியிலே தன்னை இணைத்துக் கொண்டவர். நாடறிந்த ஈழத்து மூத்த கவிஞர்களில் விக்ரர் மாஸ்ரருக்கும் ஒரு தனியான, தனித்துவமான இடமுண்டு.

வானொலியில், மேடைகளில், கவியரங்குகளில், பொதுவைபங்களில் பலநூறு கவிதைபாடி பலருடைய பாராட்டுக்களையும் பரிசில்களையும் பெற்றவர். அவ்வகையில் யாழ். திருமறைக்கலா மன்றத்தினால் *''அமுதகவிப் புலவர்''* எனப் பாராட்டப் பெற்றவர். இம் மன்றத்தின் கலைக்குரலாய், ஆலோசகராய், ஆஸ்தானக் கவிஞராய் மிக நீண்ட காலமாகப் பணிபுரிந்தது குறிப்பிடத்தக்கது. கொழும்பு தமிழ்ச் சங்கம், அவுஸ்திரேலியா தமிழ்ச் சங்கம் நடாத்திய *உலகளாவிய தமிழ்க் கவிதைப் போட்டிகளில்* பரிசில்களைப் பெற்றவர்.

இவரது ஆக்கங்கள் பாடநூல்கள், சமயநூல்கள், விழா மலர்களிலும், பாதுகாவலன், வீரகேசரி, சுதந்திரன், ஈழநாடு, தினகரன் போன்ற பத்திரிகைகளிலும் , நான், விவேகி, புதியஉலகம் போன்ற தமிழ் இதழ்களிலும் வெளிவந்தன. *எம்.வி. ஜெயம், யாழ். ஜெயம், சாந்தி, செல்வி, ராஜி, பொன், அமரநாத்* முதலிய புனை பெயர்களிலும் இவை பிரசுரிக்கப்பட்டன.

புறாவே பற, இதய வீணை, புனித சூசையப்பர் அம்மானை, புனித யோசவ்வாஸ் அம்மானை, சிந்தை இனிக்கும் செல்வம், புனித ஆசீர்வாதப்பர் அம்மானை போன்றவை இவரின் கைவண்ணத்தினாலானவை.

எத்தனை பேருக்குப் பாட்டெழுதியிருப்பார்!.. எத்தனை பெரியார்களைப் பாராட்டிப் பா வடித்திருப்பார்!.. எத்தனை கவிதைகளைப் பாடியிருப்பார்! ... எத்தனை மனிதநேய சமூகப் பணிகள் புரிந்திருப்பார்!... எத்தனை மாணவச் செல்வங்களை உருவாக்கியிருப்பார்!....அத்தனையும் இன்று இவர் பணி சொல்லும்.

ஆழமான விசுவாசப் பயணமும், நேர்மையான வாழ்வும், பொறுப்புள்ள குடும்பத் தலைவனாக, பாசமுள்ள தந்தையாக, நல்வழி நடத்தும் ஆன்ம பலம் கொண்ட தலைவனாக, அறிவூட்டும் ஆசிரியராக, நல் நண்பனாக, மனிதநேயம் கொண்ட பண்பாளனாக, இலக்கியப் படைப்பாளனாக, இறைபற்றுடையவராக, இல்லறத் தொண்டனாக வாழவைத்தது என்றால் இவரை அறிந்தவர்கள, தெரிந்தவர்கள், இவரோடு பழகியவர்கள் இவரால் பயிற்றப்பட்டவர்கள் அத்தனைபேரும் இப் பெருமகனின் ஆளுமையின் சிறப்புக்களை அறிவர்.

| | | |
|---|---|---|
| *நம்பிக்கையின்* | *நல்லூழியனாய்* | *வாழ்ந்தீர்* |
| *நல்லாசிரியனாய்* | *நாடேற்றும்கவிஞனாய்* | *பணிபுரிந்தீர்* |
| *நிறைவாழ்வை* | *நாடித்தேடிப்* | *பயணித்தீர்* |
| *நிலையின்பம்* | *நிறைவாய்* | *பெறுவீர்.* |

**அருள்திரு செ. அன்புராசா அ.ம.தி**

# முதல்நன்மை வாங்க முன் தயாரிப்பு

பக்க தொடர்ச்சி...

தவறாக நினைத்திருந்தான். தன் அக்கா மீது கொண்டிருந்த அளவற்ற அன்பின் காரணமாகத் தனது உயிரையே அளிக்கத் தயாராக இருந்தான்.

நம்மைப் படைத்துப் பாதுகாத்து, அன்பு செய்துவரும் இறைவன் தம் மகனையே நம் மீட்புக்காக இவ்வுலகிற்கு அனுப்பினார். *(யோவான் 3:16).* இறைவனின் தியாக உள்ளத்தை இந்நிகழ்வில் பார்க்கமுடிகிறது. இவ்வுலகிற்கு மனிதனாக வந்த இயேசுவும், நாம் வாழ்வில் வளரவேண்டும் என்பதற்காக – உறவில் உயிர்பெற வேண்டும் என்பதற்காகத் தம்மையே பலியாகத் தந்தார் *(யோவான் 6:31, 32)*

இவ்வாறு தம்மையே தியாகமாக இறைவன் கொடுத்ததைத்தான் திருப்பலியில் கொண்டாடுகிறோம். அந்த இறைவனைத்தான் நற்கருணையின் வடிவில் நாம் உண்ணுகிறோம். *தொடர்புடைய விவிலியப் பகுதிகள் தொ.நூ 22:1–19 ஆபிரகாம் ஈசாக்கை பலியிடத் துணிதல்.1 பேதுரு 2:5 கடவுளுக்கு உகந்தது ஆவிக்குரிய பலிகளே. எபி 13:15, 16 புகழ்ச்சிப் பலிகள். எபி 9:26 தம்மையே பலியாகக் கொடுத்துப் பாவங்களைப் போக்கினார்.*

### இ. செயல்பாடு

நாம் செய்கின்ற சிறு சிறு தியாகங்கள், பிறருடைய வாழ்க்கைக்கு மகிழ்ச்சியையும், நிறைவையும் கொண்டுவருகின்றன. என்னென்ன தியாகங்கள் செய்ய சிறுவர் சிறுமியர் தயாராக இருக்கிறார்கள் என்பதை அவர்களிடமிருந்தே கேட்டு, அவர்களையே அவற்றைச் செய்யச் சொல்லலாம்.

### 4. நற்கருணையில் உணவாக வருபவர் இயேசுவே (அ) குழந்தையின் அனுபவம்

குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்கள், வெளிநாடுகளுக்குச் சென்ற பின்பு, அவர்களுடைய நினைவாக அவர்கள் பயன்படுத்திய பொருள்களையோ அல்லது அவர்களுடைய புகைப்படத்தையோ வைத்திருப்பது அன்றாடம் நம் குடும்பங்களில் காணப்படும் ஒரு நிகழ்வு. அப் பொருள்களையோ, புகைப்படத்தையோ பார்க்கும்போது நம் உறவினர்களின் நினைவு நம்மை ஆட்கொள்கிறது.

### ஆ. அனுபவத்திலிருந்து கோட்பாட்டிற்கு

நமது வீட்டில் இருக்கின்ற உறவினர்களின் புகைப்படத்தைப் போன்று நற்கருணையும் ஒரு நினைவுச் சின்னம்தான் என்றாலும் அதற்கும் ஒருபடி மேலானது. ''இதை என் நினைவாகச் செய்யுங்கள்'' என்று கூறிய இறைவன், ''இதோ உலகம் முடியும் வரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன்'' என்று கூறி, நற்கருணையில் உண்மையிலேயே பிரசன்னமாயிருக்கிறார். அன்று எம்மாவு சீடர்கள், அப்பத்தைப் பிடும்போது இயேசுவைக் கண்டுகொள்கிறார்கள் *(காண்க: லூக் 24:13–35).* நாமும் நற்கருணையை உட்கொள்ளும்போது இயேசுவை உட்கொள்கிறோம் என்பதை உணர வேண்டும். *தொடர்புடைய விவிலியப் பகுதிகள் மத். 28:20 எந்நாளும் உங்களுடன் இருக்கிறேன் 1 கொரி 10:16,17 அப்பத்தைப் பிட்டு உண்ணும்போது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்கிறோம்.*

### இ. செயல்பாடு

உலகத்தை ஆண்டு வழிநடத்திவரும் இயேசு கிறிஸ்து உன் உள்ளத்தில் வரும்போது, அவரை வரவேற்க உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருக்கவும், நற்கருணையைப் பெறும்போது பக்தியுடனும், மரியாதையுடனும் நடந்துகொள்ளவும் சொல்லித் தரப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல்நன்மை கொண்டாட்டம் வருகிறதா?




## முதல்நன்மை வாங்க முன் தயாரிப்பு

திருச்சபையின் மையமாக விளங்கும் அருள அடையாளம் நற்கருணை. திருச்சபையை ஓர் அருளடையாளமாக மாற்றுவதும் நற்கருணையே. நமது வாழ்விற்குச் சக்தியை வழங்கி, நாம் மேலும் செயலூக்கம் பெற்றவர்களாகச் செயற்பட உறுதுணையாய் இருப்பது நற்கருணையே. *''உங்களுக்காகக் கையளிக்கப்படும் என் உடல்''* என்று கூறித் தம்மையே முழுமையாக வெறுமையாக்கிய இறைவன், நாமும் நம்முடைய சேவையின் மூலம் நம்மையே வெறுமையாக்க வேண்டும் என்று நினைவூட்டுவதும் இந்த நற்கருணை வழியாகவே *(1யோவான் 3:6).*

இவ்வாறு கிறிஸ்துவ வாழ்வின் மையமாய் விளங்கும் நற்கருணை, முதன்முதலில் சிறுவர்களுக்கு அளிக்கப்படும்போது, அவர்கள் சிறந்த முறையிலும், பக்குவமான முறையிலும் தயாரிக்கப்படுவது மிகவும் அவசியம். **ஒருவர் முதல்நன்மை பெற வேண்டுமெனில், கீழ்க்கண்ட விதிமுறைகளுக்கு அடங்கவேண்டும் என்று திருச்சபை கூறுகின்றது.** 1. அவர் திருமுழுக்குப் பெற்றவராக இருக்கவேண்டும். 2. சிந்திக்கும் பக்குவத்தை (Age of reason) அடைந்திருக்க வேண்டும். 3. சாதாரண அப்பத்திலிருந்து, நற்கருணையைப் பிரித்துப் பார்க்கக் கூடியவராக, இரண்டுக்கும் வேறுபாடு தெரிந்தவராக இருக்கவேண்டும்.

இவை மட்டுமே ஒருவர் நற்கருணை பெறுவதற்கான தகுதிகளாக அமைந்துவிட முடியாது. அவர் நற்கருணையின் முக்கியத்துவத்தை உணர்ந்தவராக, அதற்கும் தம்முடைய வாழ்விற்கும் உள்ள தொடர்பை ஓரளவிற்கேனும் உணர்ந்தவராக இருக்க வேண்டும். இதற்காக அவர் சிறந்த முறையில் தயாரிக்கப்படுவது அவசியம்.

**ஒரு குழந்தை நற்கருணை பெறுவதற்காக முன் தயாரிப்பு, அக் குழந்தை திருமுழுக்குப் பெற்றவுடனே தொடங்கிவிடுகின்றது. தங்கள் குழந்தைகளை இறைவிசுவாசத்திலும் நம்பிக்கையிலும் வளர்ப்பதாக வாக்களிக்கின்ற பெற்றோர், அக் குழந்தைக்கு நற்கருணையைப் பற்றியும். அதனுடைய சிறப்புப் பற்றியும் கற்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.**

**இறுதியில், முதல் நன்மை வழங்கப்படுவதற்கு முன்பு சில வாரங்கள் தீவிரத் தயாரிப்பு பங்கில் நடைபெறுகிறது. இந்தத் தயாரிப்பு சீரிய முறையிலும் பயனுள்ள முறையிலும் அமைய வேண்டியது அவசியமாகிறது. அதற்கான ஒரு வழிமுறை இந்தக் கட்டுரையில் வழங்கப்படுகின்றது.**

புதுநன்மை வாங்கப்போகும் குழந்தையின் மனப்பக்குவத்தை நல்ல முறையில் தயாரிப்பதுடன், நற்கருணை பற்றிய விவிலிய விளக்கங்கள், கருத்துக்களைக் கொடுப்பதும் தேவையாகின்றது. இவை கீழ்க்கண்ட படிமுறைகளில் நடைபெறலாம்.

### 1. திருச்சபை :

ஒருவர் திருச்சபையின் உறுப்பினராக இருந்தால் மட்டுமே, அவர் நற்கருணைப் பெற இயலும். எனவே அவர் திருச்சபை பற்றித் தெரிந்திருக்கவேண்டும். திருச்சபை இறைமக்களின் குடும்பம் என்பதையும், இயேசுவின் மீதும், பிறரின் மீதும் கொண்டுள்ள அன்பினால் பிணைக்கப்பட்ட சமூகம் என்பதையும் தெளிவுபடுத்தவேண்டும்.

### 2. கொண்டாட்டம் :

திருப்பலி ஒரு கொண்டாட்டம். சாவின் சக்திகள் சாகடிக்கப்பட்டதன் காரணமாகக் கொண்டாடப்படும் மகிழ்ச்சிப் பெருவிழா. இறைவனையே உணவாக உண்ணும் பகிர்வின் கொண்டாட்டம். வீட்டில் நடைபெறும் திருமணம் , பிறந்தநாள் போன்ற கொண்டாட்டங்களுக்கும், நற்கருணைக் கொண்டாட்டத்திற்குமிடையே தொடர்பும், வித்தியாசமும் விளக்கப்படவேண்டும்.

### 3. தியாகப்பலி :

நற்கருணை ஒரு கொண்டாட்டம் மட்டுமன்று. இந்த உலகம் உய்வதற்காக, இறைவன் தம்மையே முழுமையாக வழங்கிய தியாகத்தின் பலி. இறைவன் நம்மை அளவுகடந்த விதத்தில் அன்புசெய்ததன் காரணமாக தம்மையே வெறுமையாக்குகின்றார். பலியாக்குகின்றார். எனவே, குழந்தைகளுக்கு, அன்பிற்கும் தியாகத்திற்கும் இடையே உள்ள நெருங்கிய தொடர்பைத் தெளிவுபடுத்துதல் அவசியம்.

### 4. நற்கருணையில் உணவாக வருபவர் இயேசுவே :

தம்மையே பலியாக்கிய இறைவன் *''இதை என் நினைவாகச்செய்யுங்கள்''* என்று கூறி நற்கருணையில் பிரசன்னமாயிருக்கிறார். நாம் இறைவனோடும் பிறரோடும் உறவுகொள்ளச் சக்தியை அளிக்கிறார்: போன்ற உண்மைகளை தெளிவாக எடுத்துரைக்க வேண்டும்.

மேற்கண்ட நான்கு படிமுறைகள் மூலம் திருச்சபை பற்றியும் நற்கருணை பற்றியுமான அடிப்படை மறை உண்மைகளை ஓரளவிற்கேனும் விளக்கிச் சொல்ல முடியும். மேலும் ஒவ்வொரு படிநிலையை விளக்குகின்றபோதும், அவற்றைப் பற்றித் தெளிவாக குழந்தைகள் புரிந்துகொள்ளும் வகையிலும் அவர்களுடைய வாழ்க்கை அனுபவத்தோடு இணைந்து செல்லக் கூடியவகையிலும் எடுத்துரைக்க வேண்டும்.

இதற்கு இயேசுவினுடைய போதனை முறை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது. இயேசு ஒரு தலைசிறந்த ஆசிரியர். அவருடைய படிப்பினைகள், உவமைகள், மக்களின் உள்ளத்தைத் தொட்டனவாகவும், அவர்களைச் செயல்பாட்டிற்கும் அழைத்துச் செல்லக் கூடியனவாகவும் இருந்தன. இதற்கான காரணத்தைப் பார்க்கும்போது அவருடைய போதனைகளில் கீழ்க்கண்ட மூன்று நிலைகளைப் பார்க்க முடிகிறது.

1. இயேசு தம்முடைய உவமைகளில் பயன்படுத்திய பொருள்கள், உருவகங்கள் அனைத்தும் மக்களுடைய வாழ்க்கையோடு தொடர்புடையனவாகவும், அவர்களுடைய வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிப்பனவாகவும் இருந்தன. *(உ+ம். விதைப்பவன் உவமையில் வரும் விதை, முட்செடி, பாறை நிலம், நல்ல நிலம் முதலியன).*

2. இந்த அன்றாட வாழ்க்கை அனுபவத்தின் மூலம், இறையரசு பற்றிய தன்மைகள், கருத்துக்கள் ஆகியவற்றையும் பரப்பினார் *(இறைவார்த்தையின் தன்மை, பல்வேறு வகையான உள்ளங்கள்).*

3. கேட்பவரின் உள்ளத்தில் பாதிப்பை ஏற்படுத்தி, செயல்பாட்டிற்கு அழைத்துச் செல்லல் (இறைவார்த்தையைக் கேட்டு, வாழ்வில் பலன் தர அழைக்கப்படல்)

**இந்த மூன்று நிலைகளை அடிப்படையாகக் கொண்டு, நம்முடைய பாட நிலைகளை அமைத்துக்கொள்ள முடியும். (அ) குழந்தையின் அனுபவம், (ஆ) அனுபவத்திலிருந்து கோட்பாட்டிற்குச் செல்லல், (இ) செயல்பாடு**

### 1. திருச்சபை என்பது என்ன? (அ) குழந்தையின் அனுபவம்

ஒரு குடும்பத்தைப் பற்றியும், குடும்பத்தில் நடைபெறும் பல்வேறு செயல்பாடுகளைப் பற்றியும், சிறு சிறு கதைகளின் மூலமாகவோ, வரைபடங்களின் மூலமாகவோ ஆசிரியர் விளக்கலாம். தேர்நதெடுக்கப்படுகின்ற வரைபடங்கள் குழந்தை தன்னுடைய வாழ்க்கையில் அன்றாடம் பார்க்கக் கூடியதாயும், அனுபவிக்கக் கூடியதாயும் இருப்பது அவசியம். இதன்மூலம் ஒரு குடும்பத்தைப் பற்றிய கருத்தை ஒரு குழந்தை பெற்றுக் கொள்கிறது.

#### ஆ. அனுபவத்திலிருந்து கோட்பாட்டிற்கு

இந்நிலை கீழ்க்கண்டவாறு விளக்கப்படலாம்: ஒவ்வொருவருக்கும் ஒரு குடும்பம் இருக்கிறது. இக் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் மற்றவர்களை அன்பு செய்து, ஏற்றுக்கொண்டு வாழ்கின்றனர். இந்தக் குடும்பத்திற்குத் தலைவராக இருப்பவர் தந்தை. இதேபோல் இந்த உலகத்தில் ஏராளமான குடும்பங்கள் இருக்கின்றன. இந்தக் குடும்பங்கள் அனைத்தும் இணைந்து, ஒரு பெரிய குடும்பத்தை உருவாக்குகின்றன. இந்தப் பெரிய குடும்பத்திற்குத் தலைவராக இருப்பவர் கடவுள்.

இந்தப் பெரிய குடும்பத்திற்கு வேறு ஒரு பெயரும் உண்டு. அதுதான் திருச்சபை. இந்தக் குடும்பத்திலுள்ள அனைவரும் நம்முடைய சகோதர, சகோதரிகளாக, உறவினர்களாக விளங்குகின்றனர். இந்தக் குடும்பத்தின் தலைவரான கடவுள் நம் ஒவ்வொருவரையும் அன்பு செய்கிறார். நம்மீது பாசமும், பரிவும் கொண்டுள்ளார். இந்தத் தந்தைக்கும் நமக்குமிடையே உள்ள நெருங்கிய உறவைத்தான் *''விண்ணுலகிலிருக்கிற எங்கள் தந்தையே''* என்ற கிறிஸ்துவின் செபம் விளக்குகிறது. (இந்தச் செபத்திற்கான விளக்கம் விரிவாகத் தரப்படலாம்). *தொடர்புடைய விவிலியப் பகுதிகள்: 1. லூக்கா 11:1–4 கர்த்தர் கற்பித்த செபம் 2. மத்தேயு 16:18,19 – இந்தப் பாறையின் மீது என் திருச்சபையைக் கட்டுவேன். 3. எபே 2:19 ''நீங்கள் கடவுளின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்''*

#### இ. செயல்பாடு

ஒரு குடும்பத்தின் அடிப்படையாக – ஆணிவேராக – விளங்குவது அன்பு! இந்த அன்பு செயலாக்கம் பெறுவது நாம் பிறருக்குப் புரிகின்ற பணியில்தான். குழந்தைகள், தங்கள் குடும்பத்தில் எவ்வாறெல்லாம் தங்களுடைய பெற்றோர்களுக்கும், சகோதர சகோதரிகளுக்கும் உதவியாகப் பணிபுரிய முடியும் என்று அவர்களிடையே கேட்டு, அக்காரியங்களை அவர்களே செய்யச் சொல்லுதல்.

### 2. கொண்டாட்டம் (அ) குழந்தையின் அனுபவம்

வீடுகளில் கொண்டாடப்படும் திருமணவிழா, பிறந்தநாள் விழா முதலியன பற்றியும், ஊரில் கொண்டாடப்படும் கோவில் திருவிழா பங்கு விழா பற்றியும், அவற்றின் தன்மைகள் பற்றியும் ஆசிரியர் விளக்கிக் கூறலாம். முடியுமானால் வகுப்பு அளவில் ஒரு கொண்டாட்டத்திற்கும் ஏற்பாடு செய்யலாம். அந்த நாட்களில் வரும் திருச்சபையின் ஒரு திருவிழாவை மையமாக வைத்து, குழந்தைகள் அனைவரையும் **ஒரு குடும்பமாக வரவழைத்து கொண்டாட்டத்தை நடத்தலாம். விளையாட்டுகள்,** கலைநிகழ்ச்சிகள் போன்றவற்றில் குழந்தைகள் தங்களுடைய பங்களிப்பை முழுமையாக அளிக்க அழைக்கப்பட வேண்டும்.

#### ஆ. அனுபவத்திலிருந்து கோட்பாட்டிற்கு

ஒரு கொண்டாட்டத்தின்போது, ஒவ்வொருவரும் தங்களுடைய பொருள்களை, செல்வத்தை, திறமைகளை, வேலையைப் பகிர்ந்து கொள்கிறார்கள். இந்தப் பகிர்வு அங்கு மகிழ்ச்சியைக் கொண்டுவருகிறது, நிறைவைக் கொண்டு வருகிறது.

திருப்பலியும் ஒரு கொண்டாட்டமே! இறைவன் தமது வார்த்தையின் மூலமும் நற்கருணையின் மூலமும், தம்மையே நம்முடன் பகிர்ந்துகொள்கிறார். இந்தப் பகிர்வு நமது ஆன்மீகப் பசியைப் போக்குகின்றது, நம்மை நிறைவடையச் செய்கின்றது, நம்மில் மகிழ்ச்சியை ஊற்றெடுக்கச் செய்கிறது. இயேசு ஐந்து அப்பத்தை ஐயாயிரம் பேருக்குப் பகிர்ந்து அளித்தபோது, அங்கு இருந்த அனைவரும் மகிழ்ச்சி அடைந்தனர் *(யோவான் 6:1–15)*

மாறாக இந்தப் பகிர்ந்துகொள்ளும் தன்மை கொரிந்தியரிடையே இல்லை. ஒரு சிலர் குடிவெறியில் திளைத்திருக்க, மிகப் பலரோ பசியால் வாடினர். இதைப் புனித பவுல் அடியார் கடுமையாகச் சாடுகிறார். *(1கொரி. 11:17–25) தொடர்புடைய விவிலியப் பகுதிகள்: திப 4:32–37 – தங்களுக்குள்ள உடமைகளைப் பகிர்ந்து கொண்டனர். லூக். 22:17 இதைப் பெற்று உங்களுக்குள்ளே பகிர்ந்துகொள்ளுங்கள். மாற். 8:1–10 நாலாயிரம் பேருக்கு உணவு பரிமாறப்படல்.*

#### இ. செயல்பாடு

1. வீட்டிலும், பங்கிலும் நடைபெறும் விழாக்களிலும் கொண்டாட்டங்களிலும் முழுமையாகப் பங்கெடுக்க உதவுதல்.

2. பலிப்பீடத்தில் இயேசுவைப் பகிர்ந்துகொள்ளும் நாம், ஏழைகளோடு நம்மிடம் உள்ளதைப் பகிர்ந்துகொள்ள அழைக்கப்படுகிறோம் என்கிறார் பேராயர் கெல்டர் காமரா (Helder Camara). குழந்தைகள் தங்கள் வாழ்வில் எவ்வாறெல்லாம் பகிர்ந்து கொள்ள முடியும் என்று விளக்கி, அவர்களுக்குள் பகிர்வு மனப்பான்மையைத் தூண்டுதல்.

### 3. தியாகப்பலி (அ) குழந்தைகளின் அனுபவம்

பெற்றோர்கள், பிள்ளைகள் நலனுக்காகப் பல தியாகங்கள் செய்வது குடும்பங்களில் நாம் அன்றாடம் காணும் காட்சி. அவர்கள் செய்யும் பல்வேறு தியாகங்கள் எடுத்துரைக்கப்படலாம். மேலும் தியாகம் நம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் பின்னிப் பிணைந்த ஒன்று. எங்கு அன்பு உள்ளதோ அங்குத் தியாகம் இருக்கிறது. ஒரு சிறுகதை. ஒரு சிறுமி அறுவை சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாள். அறுவை சிகிச்சைக்குத் தேவையான இரத்தத்தைத் தர பலரும் முன்வந்தனர். ஆனால் யாருடைய இரத்த வகையும் அந்தச் சிறுமிக்கு ஒத்துவரவில்லை. அவளுடைய தம்பியின் இரத்தவகை மட்டுமே ஒத்துப்போகக் கூடியதாக இருந்தது. அவனிடம் *''உன் அக்காவிற்கு இரத்தம் தருகிறாயா?''* என்று கேட்கிறார்கள். அவன் ஒரு நிமிடம் யோசித்துவிட்டு *''சரி''* என்று கூறினான். மறுநாள் படுக்கையில் கிடத்தி, அவன் உடம்பில் இருந்து இரத்தம் எடுத்தார்கள். இரத்தம் எடுத்த பின்பும் அவன் கண்களை மூடியிருந்தான். அவன் கண்களைத் திறந்து, ஆச்சரியத்துடன், *''நான் இன்னும் சாகவில்லையா?''* என்று கேட்டான்.

இதைப் போன்ற சிறு சிறுகதைகளும், தியாகத்தைச் சுட்டிக் காட்டும் நிகழ்வுகளும் சொல்லப்படலாம்.

#### ஆ. அனுபவத்திலிருந்து கோட்பாட்டிற்கு

அந்தச் சிறுவன், தான் இரத்தம் கொடுத்தால், தனது உயிர் போய்விடும் என்று


*(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பொதுநிலையினர் மகாநாடு
## புத்தாயிரம் ஆண்டிலே தூய ஆவியால் நிரப்பப்பெற்ற கிறிஸ்துவின் சாட்சிகளாவோம்

# நீதிக்காக நியாயத்திற்காக குரல் கொடுக்கும் வேளையில் அச்சுறுத்தல்கள் ஏற்படுவது இயற்கையே

## தேசிய பொதுநிலையினர் மகாநாட்டில் மன்னார் ஆயர்



மன்னார் ஆயர்

அன்பும் நட்பும் எங்குள்ளதோ அங்கே இறைவன் இருக்கின்றான். என்ற வாக்கிற்கிணங்க நாம் இன்று அன்பையும், நட்பையும், அமைதியையும், சமாதானத்தையும் தேடி நிற்கின்றோம். எங்கு பார்த்தாலும் எல்லோர் வாயிலும் பேசப்படுகின்ற வார்த்தை சமாதானமே. ஆனால் இவையின்றி நாம் நிற்கின்றோம் சிறப்பாக இந்த அமைதியின்றி வடக்கு கிழக்கு மக்கள் நாள்தோறும் சொல்லொண்ணாத் துன்பத்தை எதிர்நோக்கி நிற்கின்றனர். எமது நாட்டுக்கு இன்று தேவையானது சமாதானமே. இதற்காகவே நான் கடந்த சில ஆண்டுகளாக பெருமுயற்சி எடுத்து வருகின்றேன்.

இந்த யுத்தத்தினால் பாதிக்கப்படுவது எமது இளைஞர் சமுதாயமே. நாளைய விடியல் எமக்கு எப்படி இருக்கப்போகிறது என்ற ஏக்கமே என் உள்ளத்தில் ஆழமாக வேரூன்றி இருக்கின்றது. அதன் காரணத்தினால்தான் நான் சமாதானத்திற்கான அடிப்படை நடவடிக்கைகள் பலவற்றில் அக்கறையும் ஈடுபாடும் கொண்டிருக்கின்றேன். நான் நீதிக்காகக் குரல் கொடுக்கும்போது தனியே தமிழருக்காக அதுவும் விடுதலைப் புலிகளுக்காக என்றே சிலர் கருதுகின்றனர். ஆனால் நான் மனித இனத்திற்காக இலங்கைக் குடிமகன் ஒவ்வொருவனின் சுபீட்சமான வாழ்வுக்காகவுமே கதைக்கின்றேன். ஆனால் நான் கதைப்பதில் சுட்டிக்காட்டுவதின் அர்த்தத்தை விளங்கிக் கொள்ளாதவர்கள்தான் என்னைப் பற்றித் தவறாக எடைபோட்டு என்னை விடுதலைப் புலிகளின் அனுதாபி என்று கூடக் கூறுகின்றனர். இதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. **இதனால் எனது உயிருக்குக்கூட பல அச்சுறுத்தல்கள் விடப்பட்டுள்ளன. நான் எதையுமே பொருட்படுத்துவது இல்லை. இவ்வாறான பணியைச் செய்ய எமக்குத் துணிவு அவசியமானது. நீதிக்காக நியாயத்திற்காகக் குரல்கொடுக்கும் வேளையில் அச்சுறுத்தல்கள் ஏற்படுவது இயற்கையே. இதையே இறைமகன் கிறிஸ்துவுக்கும் விடுத்தனர்.**

ஆனால் இந்த யுத்தத்தை நிறுத்தி அமைதியையும், சமாதானத்தையும் ஏற்படுத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நான் இரண்டு சாராரையும் கேட்டுக் கொள்கின்றேன். அண்மையில் வன்னிக்குச் சென்றவேளையில் கூட நான் இதனை வலியுறுத்தியுள்ளேன்.

நாம் சமாதானமாக வாழவேண்டும். எம்மில் சமாதானம் வாழப்படவேண்டும். அது இன்று எம்மிடையே இல்லை. அண்மையில் மன்னாரில் இரண்டு குடும்பப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்பட்டது நீங்கள் அறிந்ததே. இதற்குக் காரணமானவர்கள் அதிகாரத்தையும் செல்வாக்கையும் பயன்படுத்திச் சாதாரண அப்பாவித் தமிழ் மக்களைத் தமக்கு உரியவிதமாகப் பயன்படுத்தி அவர்களது சொத்துக்களைச் சூறையாடி அவர்கள் வாழ்வுக்குப் பங்கம் விளைவிக்கின்றனர். இவர்களுக்காகக் குரல்கொடுக்கப் பலர் பயப்படுகின்றனர். எனவேதான் இந்த அப்பாவிப் பெண்களுக்காகக் குரல் கொடுத்தேன். அவர்களின் செயற்பாட்டை, காட்டுமிராண்டித்தனத்தை வெளியுலகிற்கு எடுத்துக் காட்டினேன். இது தவறானதா? இது எனது பணி. ஒரு ஆயன் தன் ஆடுகள் பற்றி அக்கறைகொள்ளக் கூடாதா? இதை ஏன் உரியவர்கள் விளங்கிக் கொள்கின்றார்கள் இல்லை என்பதுதான் எனக்குத் தெரியாது.

எனவே சமாதானத்தை நாம்தான் உருவாக்கவேண்டும். முதலில் என்னில் அதை உருவாக்க வேண்டும். பின் அதைக் குடும்பத்தில், பங்கில் நான் வாழும் சமூகத்தில் பின் இலங்கை முழுவதிலும் உருவாக்க வேண்டும். உருவாக்கினால் மட்டும் போதாது அது வாழப்படவேண்டும். அது வாழப்படுவதற்கு எமது மனநிலை மாறவேண்டும்.

**இன்று இனப்பிரச்சினையால் இடம்பெயர்ந்து வாழும் அகதிகள், உற்றார் உடன் பிறப்புகளை இழந்து அநாதையாக வாழுபவர்கள், தகுதியில்லாமல் ஆக்கப்பட்டவர்கள், இழப்புக்குள்ளாக்கப்பட்டவர்கள், கிராம எல்லைப் புறங்களில் வாழும் மக்கள், LTTEயின் ஆதரவாளர்களாக ஆயர்களும், குருக்களும், துறவிகளும், திருச்சபையும் இருப்பதாகக் குற்றம் சாட்டும் பலரும், பொருளாதாரம் மீது எதிரான விளைவுகள், மட்டுமீறிய தனிநாட்டுப் பற்றுடைய உணர்ச்சி சில தமிழர்களிடையேயும், சிங்களவர்களிடையேயும் காணப்படுகின்றது. இவர்கள் யாவரும் எம்மிடையே இருந்து அகற்றப்படவேண்டும். மனிதம் வாழப்படவேண்டும். மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். இவை அனைத்தும் கடைப்பிடிக்கப்பட்டால் நாம் ஏங்கித் தேடுகின்ற அமைதி எமக்கு விரைவில் வரும் என்பதில் ஐயமில்லை. இதை எமது வாழ்வின் தேடலாகக் கொள்ளவேண்டும்.**



பொதுநிலையினர் மகாநாட்டில் கன்னியர்கள், குருக்கள், பொதுநிலையினர் கலந்துரையாடலில் ஈடுபடும்போது இடமிருந்து இரண்டாவது அருள்திரு தேவராஜா அ.ம.தி மூன்றாவது அருள்சகோதரர் ஆர். ஜோசப் ஜெயகாந்தன்

இவ்வாறு தேசிய பொதுநிலையினரின் மகாநாட்டில் மன்னார் ஆயர் மேதகு இராயப்பு ஜோசவ் ஆண்டகை கூறியதைத் தொடர்ந்து குழுஆய்வு இடம்பெற்றது. இதில் துறவற சபைகளைச் சார்ந்த குருக்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் பங்குபற்றிய குழுஆய்வும், கலந்துரையாடலும் பலருக்கு நாட்டு நடப்புப் பற்றிய வெளிச்சத்தைக் கொடுப்பதாக அமைந்தது. முதலில் மன்னார் ஆயரின் கருத்துப் பற்றி உரைபற்றி வினாவிய வேளையில் பலரும் அதற்குச் சார்பான வகையில் குரல் கொடுத்தாலும் சிலர் ஏனோதானோ என்ற போக்கைக் கடைப்பிடித்ததையும் அவதானிக்க முடிந்தது.

**சில பெரும்பான்மை இனத்தைச் சார்ந்த அருட்சகோதரிகள் மன்னாரில் இரு குடும்பப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படவில்லையென்றும், மன்னார் ஆயர் பற்றி ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவந்த சில கருத்துக்களையும் எடுத்துக் காட்டினர். அதனைச் செவிமடுக்க முடியாத ஏனைய துறவிகள், ஆயர் ஒருவர் இந்த விடயம் பற்றி நடந்திருக்க முடியாத சம்பவம் ஒன்றை இத்தனைபேர் முன்னிலையில் தவறாகத் தெரிவிப்பாரா? என்று வினாவிக் கலந்துரையாடலை உணர்ச்சிபூர்வமாக்கினர். இவ்வேளையில் பலரின் அபிப்பிராயம் தென்னிலங்கைத் துறவிகள் இலங்கை அரசின் தொடர்புச் சாதனங்கள் மேல் அளவுக்கதிகமான அபரீதமான நம்பிக்கையை கொண்டிருக்கின்றனர் என்பதேயாகும்.**

இதனை இன்னும் உண்மைப்படுத்தும் முகமாக அருட்சகோதரி ஒருவர் இப் பாலியல் வல்லுறவு பற்றிய மருத்துவ அறிக்கையைத் தான் பார்வையிட்டதாகவும் கூறினார். இதனைச் செவிமடுத்த அனைவரும் அப்படியாயின் இது கண்டிக்கப்படவேண்டிய ஒரு விடயம் என்றும் இதற்கு உரியவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும் என்றும் கூறி **ஆயருக்கு விடுவிக்கப்பட்ட அச்சுறுத்தல் பற்றி அனுதாபம் தெரிவித்து இதனை மற்றவர்களுக்கும் தெரிவித்து ஆயரவைக்கும், இலங்கை ஜனாதிபதிக்கும் மகஜர் ஒன்றை எழுதி எமது எதிர்ப்பைத் தெரிவிக்கவேண்டும் என்றதோடு மட்டுமல்லாது எம்மால் கூடிய வகையில் நீதிக்கும் சமாதானத்திற்கும் குரல்கொடுக்க வேண்டும் என்ற கருத்தையும் வலியுறுத்தினர்.**

அருள்சகோதரர் சு.ஜெயகாந்தன்,
டிலாசால் இல்லம் கொழும்பு 15.

# ஒரு வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வு

திரு எம்.டி. சூசைநாதர்

இலங்கைத் திருச்சபையின் வரலாற்றிலே 2001 ஏப்ரல் மாதம் 19ம் திகதியிலிருந்து 22ம் திகதி வரையிலான தினங்களில் கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற தேசிய பொதுநிலையினர் மகாநாடு ஓர் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகும். இம் மகாநாடு ''புத்தாயிரமாம் ஆண்டிலே தூய ஆவியால் நிரப்பப்பெற்ற கிறிஸ்துவின் சாட்சிகளாவோம்'' என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டது. 1995ம் ஆண்டு திருத்தந்தை யோசேவ்வாஸ் அடிகளாரின் முத்திப்பேறுபெற்ற பட்டம் வழங்கும் வைபவத்துக்காக இலங்கைக்கு வந்தபோது திருத்தந்தை எம் அனைவரையும் ''புத்தாயிரமாம் ஆண்டிலே தூய ஆவியால் நிரப்பப்பெற்ற கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ'' எமக்கு அழைப்பு விடுத்தார். அவரது இந்த அழைப்பே இம் மகாநாட்டில் கருப்பொருளாகவும் அமைந்தது.

ஏப்ரல் 19ம் திகதி மாலை 5 மணியளவில் கண்டி தேசிய குருத்துவக் கல்லூரி சிற்றாலயத்தில் இலங்கையின் அனைத்து மறைமாவட்டங்களிலும் உள்ள ஆயர்களும் பவனியாக பீடத்தண்டை சென்று மங்கள விளக்கேற்றி வேதாகம ஆராதனையுடன் மகாநாடு ஆரம்பமானது. முதன்முதலாக திருகோணமலை– மட்டக்களப்பு ஆயரும், தேசிய பொதுநிலையினர் ஆணைக் குழுவின் தலைவருமான மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையால் வத்திக்கான செயலாளரான கருதினால் ஆஞ்சலோ சொடானோ ஆண்டகையின் ஊடாக வழங்கப்பட்ட பரிசுத்த திருத்தந்தையின் ஆசிச் செய்தி வாசிக்கப்பட்டது. பரிசுத்த தந்தை தமது ஆசிச் செய்தியில் ''திருமுழுக்கினாலும், உறுதிப்படுத்தலினாலும் இறைமக்களாகிய பொதுநிலையினர் தங்கள் அழைத்தலையும் பணியையும் மிகுதியாக உணர்ந்துகொள்ளவும், அவர்கள் தாம் வாழும் சமுதாயத்தையும் கலாச்சாரத்தையும் நற்செய்தி மதிப்பீடுகளினாலும் உண்மையினாலும் ஊடுருவிப் பரவச் செய்வதில் செயல்திறமுடைய பங்கினை அளிக்க இம் மகாநாடானது அகத்தூண்டுதலளிக்குமென தான் நம்புவதாக'' குறிப்பிட்டிருந்தார்.

பாப்பரசரின் பிரதிநிதி மேதகு தோமஸ் ஜா ஆண்டகை உரையாற்றும் போது ''எல்லா விசுவாசிகள் போன்று உங்களது அழைப்பும் பணியும் திருமுழுக்கு எனும் அருட்சாதனத்தினால் நீங்கள் பெற்றுக்கொண்ட புதுவாழ்வில் ஆழமாக வேர் ஊன்றியுள்ளது. திருமுழுக்கினால் நீங்கள் கிறிஸ்துவுக்குள் ஒன்றாக்கப்பட்டு கிறிஸ்துவின் குருத்துவ, இறைவாக்கு, அரச பணியில் பங்கேற்று உலகிலும் திருச்சபையிலும் கிறிஸ்தவ மக்களுக்குரிய மறையறிவுப் பணியில் உங்களின் செயல்திறனுக்கேற்றவாறு பணிபுரிகின்றீர்கள்'' என்று வாழ்த்தினார்.

(தொடர்ச்சி 9ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதரபத்திர (உயர்தர)ப் பரீட்சை — 1999

## கிறிஸ்தவம் 1 – பகுதி 1

**எல்லா வினாக்களுக்கும் விடையை (இப் பத்திரத்தில்) எழுத வேண்டும். *மிகச் சரியான* விடையைத் தெரிந்தெடுத்து அடைப்புக்குள் இடுக.**

*1. இறை ஏவுதல் என்பதால் கருதப்படுவது.*
1. இறைவன் திருவிவிலியத்தின் மனித எழுத்தாளர்களை இப் பணிக்காக விசேட விதமாகத் தெரிந்துகொண்டமை. 2. இறைவன் திருவிவிலியத்தின் மனித எழுத்தாளர்களுடன் விசேடவிதமாகப் பிரசன்னமாய் இருந்தமை. 3. இறைவன் திருவிவிலியத்தின் மனித எழுத்தாளர்களின் நோக்கங்களையும் முடிவுகளையும் விசேடவிதமாகச் செயல்படுத்தியமை. 4. இறைவன் திருவிவிலியத்தின் மனித எழுத்தாளர்களை விசேடவிதமாக ஆட்சிசெய்தமை. 5. இறைவன் திருவிவிலியத்தின் மனித எழுத்தாளர்களின் சுதந்திரத்தை விசேடவிதமாகப் பாராட்டியமை.

*2. மீட்பு வரலாற்றில் 'பி' (குரு) பாரம்பரியத்தின் பிரதான நபர்கள் நால்வர்களும்*
1. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு 2. ஆபிரகாம், யாக்கோபு, யோசேப்பு, மோசே 3. ஆதாம், நோவா, ஆபிரகாம், மோசே 4. ஆதாம், ஆபேல், ஆபிரகாம், மோசே 5. நோவா, ஈசாக்கு, யாக்கோபு, மோசே

*3. யாக்கோபு தனது எதிர்காலம் பற்றிய இறைதிட்டத்தை விளங்கிக் கொண்டமை.*
1. எப்ரோனில் 2. பெத்தேலில் 3. பெயேர் செபாவில்
4. சிக்கேமில் 5. கிலயாத்தில்

*4. இறைவன் முதல் முறையாக மோசேயுடன் உரையாடும் போது குறிப்பிட்ட மூன்று நபர்களின் பெயர்களாவன.*
1. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு 2. ஆபிரகாம், யாக்கோபு, யோசேப்பு 3. நோவா, ஆபிரகாம், யாக்கோபு 4. நோவா, ஈசாக்கு, யாக்கோபு 5. ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு

*5. மோசே தனது மக்களை எகிப்தில் இருந்து வெளியேறுவதற்குப் பார்வோனிடமிருந்து அனுமதி பெற்றது*
1. இறைவனின் விடுதலையைப் பெற்றுக்கொள்வதற்கு 2. இறைவனின் பராமரிப்பின் உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கு 3. இறைவனின் மக்களாக வெளியேறுவதற்கு 4. இறைவனோடு ஒரு உடன்படிக்கை செய்வதற்கு 5. இறைவனை வணங்கிப் பலியிடச் செல்வதற்கு

*6. பத்துக் கட்டளைகளின்படி பெற்றோரைக் கனம் பண்ணுதல்*
1. இறை ஆசியைப் பெற்றுக்கொள்வதற்காக 2. இறைவனுக்கு மரியாதை செய்வதற்காக 3. இறை விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக 4. நீண்டகாலம் வாழ்வதற்காக 5. ஏனையோரால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்காக

*7. வாக்குப்பண்ணப்பட்ட நாட்டிற்கு வெளியே பணிபுரிவதற்காக அழைப்புப்பெற்ற முதல் இறைவாக்கினர்*
1. யோனா 2. மீக்கா 3. ஆமோஸ் 4. எசேக்கியேல் 5. எரேமியா

*8. புதிய உடன்படிக்கையைப் பற்றி பழைய உடன்படிக்கையில் முதலில் எடுத்துரைத்த இறைவாக்கினர்*
1. எரேமியா 2. ஏசாயா 3. எசேக்கியேல் 4. நாத்தான் 5. நாகூம்

*9. இஸ்ராயேல் மக்களின் யாகப்பலியை இறைவன் வெறுக்கின்றார் என்பதை வெளிப் படுத்தியவர்கள்.*
1. எரேமியா, ஆமோஸ் 2. எசாயா, ஆமோஸ் 3. எசாயா, எரேமியா 4. எசாயா, ஓசேயா 5. எசேக்கியேல், ஓசேயா

*10. நான்கு நற்செய்தி நூல்களின் மையமாக விளங்குவது*
1. யேசுக்கிறிஸ்துவின் புதிய கட்டளை 2. யேசுக்கிறிஸ்துவின் கடைசி இரா உணவு 3. யேசுக்கிறிஸ்துவின் வெற்றியான உயிர்ப்பு 4. யேசுவின் மரணம் 5. யேசுவின் பாஸ்கா மறைபொருள்

*11. யேசுவின் கடைசி இரா உணவை விரிவாக விளக்குகின்ற புதிய உடன்படிக்கையின் எழுத்தாளர்கள் நால்வர்.*
1. மாற்கு, மத்தேயு, லூக்கா, யோவான் 2. மாற்கு, மத்தேயு, லூக்கா, யாக்கோபு
3. மாற்கு, மத்தேயு, யோவான், பவுல் 4. மாற்கு, லூக்கா, யோவான், பவுல்
5. மாற்கு, மத்தேயு, லூக்கா, பவுல்

*12. புனித மாற்கு திருமுழுக்கு யோவான் பற்றி இறைவாக்காக எடுத்துரைத்த மேற்கோள்*
1. ''இதோ என் தூதனை உமக்கு முன் அனுப்புகின்றேன்'' 2. ''குனிந்து அவருடைய மிதியடிவாரை அவிழ்க்கக் கூட எனக்குத் தகுதியில்லை'' 3 ''என்னை அவர் அபிஷேகம் செய்தார்'' 4. ''என் அன்பார்ந்த மகன் நீயே'' 5. ''என்னை விட வலிமை மிக்க ஒருவர் எனக்குப் பின் வருகிறார்''

*13. புனித மத்தேயு சம்பந்தமாக தனது நற்செய்தியை எழுதுவதன் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அதிக கவனம் செலுத்தியமை.*
1. இறைவாக்கு சம்பந்தமாக 2. உடன்படிக்கை வாழ்வு சம்பந்தமாக 3. வரலாறு சம்பந்தமாக 4. வல்லமையுள்ள செயல்கள் சம்பந்தமாக 5. யூதர்களின் சம்பிரதாயம் சம்பந்தமாக

*14. இறை அரசை விளக்குவதற்காகப் புனித மத்தேயு எடுத்துக்காட்டியுள்ள மூன்று உவமைகள்*
1. திருமண விருந்து உவமை, கடுகுவிதை உவமை, விதைப்பவர் உவமை 2. முத்து, வலை, ஆட்டுப்பட்டி 3. திருமண விருந்து, ஆட்டுப்பட்டி உவமை, திராட்சைக்கொடி உவமை 4. திருமண விருந்து உவமை, முத்து, திராட்சைக்கொடி உவமை 5. புதையல் உவமை, முத்து உவமை, வலை உவமை

*15. யேசுவை ஏரோது அரசனிடம் கொண்டு சென்றபோது ஏரோது மகிழ்ச்சி அடைந்தமை*
1. அவர் முன்னிலையில் தனது அதிகாரத்தைக் காட்டுவதற்கு 2. அவர் கலிலேயன் என்று எண்ணியபடியால் 3. அவரைப் பார்ப்பதற்கு மிக ஆசையோடு இருந்தபடியால் 4. அவரினால் தனக்குப் பிரபல்யம் கிடைக்கும் என்பதால் 5. அவர் பிலாத்து முன்னிலையில் மௌனமாய் இருந்தபடியால்

*16. புனித யோவான் நற்செய்தியின் கருப்பொருள்*
1. இறை அன்பு 2. புதுவாழ்வு 3. இறை அரசு 4. நித்திய வாழ்வு 5.பாஸ்கா மறைபொருள்

*17. புனித யோவான் மாத்திரம் குறிப்பிடும் புதுமைகள்*
1. கடல் மீது நடத்தல் 2. ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல் 3. நூற்றுவர் தலைவரின் பிணியாளர் குணமடைதல் 4. பிறவியிலேயே பார்வையற்றவர் பார்வை பெறுதல் 5. பெத்சாயிதாவில் பார்வையற்றவர் பார்வை பெறுதல்

*18. பெந்தக்கோஸ்தே என்னும் நாளில் பேதுருவானவரின் அருளுரையில் குறிப் பிடப்பட்ட இறைவாக்கினர்*
1. யோனா 2. எரேமியா 3. மலாக்கி 4. தானியேல் 5. யோவேல்

*19. திருத்தூதர் பணியின்படி யூதாசின் இடத்திற்கு மத்தியா தெரிந்துகொள் ளப்பட்டது.*
1. செபித்தலின் மூலம் 2. சீட்டுக் குலுக்குதலின் மூலம் 3. இரகசிய வாக்கெடுப்பின் மூலம் 4. பெயர் நியமித்தலின் மூலம் 5. தூய ஆவியின் வல்லமையின் மூலம்

*20. தமாஸ்கு நகரத்தில் தொழுகைக் கூடங்களில் புனித பவுல் செய்த போதனைகளின் சுருக்கமாவது*
1. யேசுக் கிறிஸ்து பரிந்துபேசுபவர் ஆவார் 2. யேசுக்கிறிஸ்து மரணத்தில் இருந்து உயிர்த்தெழுந்தார் 3. யேசு மனித வர்க்கத்தின் மீட்பராவார் 4. யேசுக்கிறிஸ்து இறைவனின் மகனாவார் 5. யேசுக்கிறிஸ்து தனக்குத் தோன்றினார்

## கிறிஸ்தவம் 1 - பகுதி 2
**நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை அளிக்க**

2. அ) தொடக்க நூலின் படைப்பின் முதலாம் வரலாற்றிலும் இரண்டாம் வரலாற்றிலும் காணக்கூடியதாய் இருக்கும் மரபுகளுக்கேற்ற இறைவனைப் பற்றியும், மனிதனைப் பற்றியும் வெளியிடும் கருத்துக்களை விளக்குக. (பிரதான கருத்துக்கள் ஐந்தாவது சேர்த்துக்கொள்ளப்படல் வேண்டும்)
ஆ) இறைசாயலாகப் படைக்கப்பட்ட மனிதன் இறைவனுடனும் மனிதனுடனும் மாற்றம் அடையும் உலகத்துடனும் முறிவுபடாத உறவுகொள்ள வேண்டிய மதிப்பினை பெருமைப் படுத்தி எழுதுக. (100 சொற்களுக்குள் விளக்குக)
3. அ) இறைமக்களை ஆயத்தப்படுத்தும் முதல் கட்டம் பிதாப்பிதாவாகிய ஆபிரகாமின் தலைமையில் நிறைவேறியது இதை விளக்குக. (100 சொற்களில் மாத்திரம்)
ஆ) இறைவனுக்கு மாத்திரம் உரிய மக்களாவதற்கு கிறிஸ்தவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய பத்துக் கிரிகைகளை விளக்குக.
4. அ) இறைவாக்கினரின் அழைப்பின் பிரதான இலட்சணங்கள் இரண்டினை இறை வாக்கினர்களின் வாழ்வின் எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.
ஆ) இறைவனின் பணியாளர்கள் மூலமாக வெளிப்படுத்தும் முக்கியமான செயற் பாடுகள் ஐந்தினை எழுதுக. இந்த செயல்பாடுகளை உம்முடைய வாழ்க்கையுடன் எவ் விதம் தொடர்புபடுத்தலாம் என்பதை ஐந்து வழிகாட்டலுடன் விளக்குக.
5. அ) கிறிஸ்துவைப் பின்பற்றும் பாரிய செயலைக் கிறிஸ்துநாதர் எவ்விதம் போதிக் கின்றார் என்பதை பாடுகளை புனித லூக்காவின் நற்செய்தியில் இருந்து விளக்குக. உமது விளக்கத்திற்கு ஐந்து கருத்துக்களாவது உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.
ஆ) சமுதாயத்தில் ஏனைய சமயத்தவர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் ஐந்தினை உமது அனுபவ வாயிலாகக் கண்டுபிடித்து புனித மத்தேயு தனது நற்செய்தியில் வெளிப்படுத்தும் முறையில் விளக்குக.
6. அ) இறையரசு என்றால் எல்லார்மட்டிலும் இறை ஆதினத்தைப் பரப்புதல் என்பதாகும். இக்கருத்தினை கிறிஸ்துநாதர் செய்த இரு புதுமைகள் மூலம் விளக்குக.
ஆ) இறை அரசில் நுழைவதற்கு நமக்குக் கிடைக்கும் அழைப்புக்கு நமது பிரதி பலிப்பின்படி இறையரசில் தீர்ப்புக் கிடைக்கும் என்பதைத் திருமண விருந்து என்ற உவமையைக் கொண்டு 15 வரிகளில் விளக்கம் தருக.
7. அ) புனித ஸ்தேவான் (Stepaen) தலைமைக் குருவுக்கு உரைத்த அருளுரையின் போது மீட்பு வரலாற்றுக்குரிய பிரதான செயல்கள் ஐந்தினை அறிமுகப்படுத்துக.
ஆ) சவுல் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திய துன்பச் செயல்கள் அவரின் மனமாற் றத்திற்கு எப்படித் தொடர்புபடுத்தப்பட்டதென்பதை 100 சொற்களில் எழுதுக.
8. அ) சமநோக்கு நற்செய்தியிலும் புனித யோவான் நற்செய்தியிலுமுள்ள ஒற்றுமை ஐந்தினையும் வேற்றுமை ஐந்தினையும் வெவ்வேறாக எழுதுக.
ஆ) புனித யோவானின் நற்செய்தி நூலில் குறிப்பிடப்பட்டுள்ள ''நானே'' என்ற மேற்கோளின் சந்தர்ப்பங்களைக் குறிப்பிட்டு ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் குறிக்கும் விளக்கங்களை வேறுவேறாக எழுதுக.
9. அ) கிறிஸ்துநாதர் தமது அப்போஸ்தலரிடம் எதிர்பார்த்த பணியை அதிகாலைகளில் திபேரியாக் கடல் அருகில் நடைபெற்ற தரிசனம் மூலம் விளக்குக. (100 சொற்களில்)
ஆ) கிறிஸ்துநாதர் மூலம் தமது அப்போஸ்தலருக்கு ஒப்படைக்கப்பட்ட தூதுப்பணியை இன்றைய சமுதாயத்தில் நீர் எவ்விதம் முறிவுறாமல் நிறைவேற்றலாம் என்பதை விளக்குக. ( உமது விடையில் 10 கருத்துக்களாவது அடங்கியிருத்தல் வேண்டும்)
10. அ) கீழே தரப்பட்டிருக்கும் மேற்கோள்களின் ஐந்தினைத் தேர்ந்தேடுத்து ஒவ்வொரு மேற்கோளின் சந்தர்ப்பத்தினை விளக்குக.
அ) ''வழி தவறிப்போன ஆடுகளான இஸ்ராயேல் மக்களிடமே செல்லுங்கள்''
ஆ) ''எனக்குப் பேசத் தெரியாதே சிறுபிள்ளைதானே என்றேன்''
இ) ''யெருசலேமில் தங்கியிருப்பவர்களுள் எமக்கு மட்டும்தான் இந்நாள்களில் நிகழ்ந்தவை தெரியாதோ''
ஈ) ''கடவுள் என்னைச் சிரிக்க வைத்தார். இதைக்கேட்கும் அனைவரும் என்னோடு சேர்ந்து சிரிப்பார்''
உ) ''இவர்கள் திட்டமும் செயலும் மனிதரிடத்தில் இருந்து வந்தவையென்றால் அவை ஒழிந்துபோகும்''
ஊ) ''வேண்டாம் ஆண்டவரே தகுதியுடைய வேறொருவனை நீர் இப்போதே அனுப்பி வைப்பீராக''
எ) ''நான் செய்யுமாறு நீர் என்னிடம் ஒப்படைத்திருந்த வேலையைச் செய்து முடித்து நான் உம்மை உலகில் மாட்சிப்படுத்தினேன்''

### விடைகள் - பகுதி 1

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1) 2 | 2) 3 | 3) 2 | 4) 1 | 5) 5 | 6) 4 | 7) 4 | 8) 1 | 9) 2 |
| 10) 3,5 | 11) 5 | 12) 1 | 13) 1 | 14) 5 | 15) 3 | 16) 4 | 17) 4 | 18) 5 |
| 19) 2 | 20) 4 | | | | | | | |

(தொடர்ச்சி 7ம் பக்கம்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதரபத்திர (உயர்தர)ப் பரீட்சை – 1999

6ம் பக்க தொடர்ச்சி

பகுதி 2

**விடை 2**

**அ.** – இறைவன் தமது சர்வ வல்லமையினால் எல்லாவற்றையும் படைத்தார்.
– அவரால் படைக்கப்பட்டவை எல்லாம் அழகானவையெனக் கண்டார்.
– மனிதன் வாழ்வதற்கு தேவையான இயற்கைச் சூழலைப் படைத்த பின்னே மனிதனைப் படைக்கின்றார்.
– மனிதன் இறைவனுக்குச் சமமான, இறைசாயலாகப் படைக்கப்பட்டான் ஆணும் பெண்ணுமாகப் படைத்தார்.
– இவ்வுலகின் மேல் உள்ள பூரண ஆதிக்கத்தை மனிதனுக்குக் கொடுத்தார்.
– முழுமனித இனமும் படைப்புச் சம்பந்தமாகக் கதைக்கின்றது.
– இறைவன் படைப்புச் செயலை 6 நாட்களில் பூர்த்திசெய்து ஏழாம் நாளை ஆசீர்வதித்து புனித நாளாகப் பிரகடனப்படுத்தினார்.
– இறைவன் மனிதனாகச் செயலாற்றுகின்றார்.
– ஒன்றுமில்லாமையிலிருந்து காய்ந்த பொருட்களினூடாகவோ மற்றப் பொருட்களினூடாகவோ உலகைப் படைக்கின்றார். மண்ணால் மனிதனை உருவாக்கினார். ஆதாமின் விலா எலும்பினால் ஏவாளை உருவாக்கினார். மழையினால் பயிர்களை வளரச் செய்தார்.
– இறைவன் விண்ணையும் மண்ணையும் படைத்தாலும் மண்ணுலகில் நில வெளியில் எவ்விதப் புதரும் தோன்றியிருக்கவில்லை. வயல்வெளியில் எவ்விதச் செடியும் முளைத்திருக்கவில்லை, ஏனெனில் மண்ணைப் பண்படுத்த மானிடர் எவரும் இருக்கவில்லை.
– மண்ணால் மனிதனை உருவாக்கி அவன் நாசிகளில் உயிர்மூச்சை ஊத மனிதன் உயிருள்ளவன் ஆனான்.
– ஆண்டவராகிய கடவுள் கிழக்கே இருந்த ஏதெனில் ஒரு தோட்டம் அமைத்துத் தாம் உருவாக்கிய மனிதனை அங்கே வைத்தார்.
– மனிதனுக்குச் சுதந்திரத்தைக் கொடுத்து தோட்டத்தில் இருக்கும் எந்த மரத்திலிருந்தும் உன் விருப்பம்போல் நீ உண்ணலாம் நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்திலிருந்து மட்டும் உண்ணாதே எனக் கட்டளையிட்டார்.
– இறைவன் ஆதாமின் விலா எலும்பிலிருந்து பெண்ணை உருவாக்கினார்.
– மனிதனும், அவன் மனைவி ஆகிய இருவரும் ஆடையின்றி இருந்தனர். ஆனால் அவர்கள் வெட்கப்படவில்லை.

**ஆ.** – மனிதனுள் சமுதாய இயல்பு இருக்கவேண்டும். அது இறையுறவு, மனித உறவு, சமுதாய உறவென மூவகை உறவுகளாகும்.
– மனிதன் தீமைகளுக்குட்படாது இறைஅருளுக்கு திறந்த மனதுடன் வாழ்வதனால் இறையுறவு வளர்கிறது.
– மனிதன் மனித அபிமானியாக எல்லா மனிதரும் இறைவனின் படைப்பாகக் கருதி சகோதர அன்பில் வாழ்வதினால் மனித உறவை ஏற்படுத்திக்கொள்ளலாம்.
– மனிதன் சூழலின் ஒரு பகுதியாவான் அதனால் அவன் உற்பத்தி செய்து சுற்றாடலைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். இயற்கை வளங்களை வளர்ச்சியடையச் செய்ய வேண்டும். அவ்வளங்களை தமது நலனுக்காகவன்று பிறருடன் பகிர்ந்து வாழ வேண்டும்.

**விடை 3**

**அ.** – விசுவாச வாழ்வு பற்றி தடையாகயிராது மக்களுக்கு முன்மாதிரிகையாக வாழல்.
– எவ்வித சந்தேகமும் இன்றி இறைவார்த்தையை ஏற்றுக்கொள்ளல்.
– அவனிடமுள்ள செல்வங்களை இறைவனுக்காகப் பரித்தியாகம் செய்வதற்குக் கூட ஆன்ம சக்தியுள்ளவனாக வாழல்.
– பல தெய்வங்களிலான சமுதாயத்தில் ஒரே தெய்வ விசுவாசத்தில் நிலையாக வாழுதல்.
– தமக்கு முகங்கொடுக்க நேரிடும் எல்லா சவால்களுக்கும் தைரியமாக முகங்கொடுத்தல்.
– இறை பராமரிப்புப் பற்றி, ஒரே நம்பிக்கையுடன் செயலாற்றல்.
– தியாக மனப்பான்மையுடன் தாய்நாடு, உறவினர், தந்தையின் இல்லம் என்பவற்றை தியாகம் செய்ய ஆயத்தமாதல்.
– இறைவன் தந்த ஒரே பிள்ளையைக் கூட காணிக்கையாக்க ஆயத்தமாதல்.

**ஆ.** – இறைவனுக்கு மட்டும் அர்ப்பணிக்கப்பட்ட மக்களாதல்.
– இறையரசிற்கு ஏற்ற நபராக வாழ்தல்.
– இறைவனின் முன்மாதிரிகையான நீதியின் ஆயுதமாதல்.
– பாவத்திற்கு அடிமையாகாது விடுதலைபெற்ற மக்களாக வாழுதல்.
– குருட்டுப் பக்தி முயற்சிகளுக்கு ஆளாகாதிருத்தல்.
– விஷமம் நிறைந்த இயல்பு இல்லாதிருக்கவேண்டும்.
– உலகச் சார்புடையவர்களாயில்லாமலிருத்தல்
– கிறிஸ்தவன் இறை – மனித உறவின் இடைநிலையாளராக இருக்கவேண்டும்.
– இறைவனுக்கும், மனிதனுக்குமான, தொடர்புச்சாதனமாக இருத்தல் வேண்டும்.
– இறைத்துாய்மையின் மேன்மையை உலகிற்கு எடுத்துக்காட்ட வேண்டியவன் கிறிஸ்தவன்.
– எல்லா மனிதரையும், இறைவனின் படைப்பாக ஏற்று தன்னலமற்றவராக ஏற்றுக் கொள்ளுதல்.

**விடை 4**

**அ.** – அழைப்பு தரிசனத்தினூடாக அல்லது வேறு அனுபவங்களினூடாகப் பெறப்படுகின்றது.
– எல்லா இறைவாக்கினர்க்கும் இறைவனின் அழைப்புக் கொடுக்கப்படுகின்றது.
– அழைக்கப்பெற்றவர் தமது பலவீனத்தையும், தகுதியின்னையையும் நினைத்து நினைத்துத் தயக்கம் காட்டுகின்றார்.
– எனினும் இறைவன் விசேடவிதமாக அந்த நபரைத் தைரியப்படுத்துகின்றார். அவ்வாறு தைரியப்படுத்தப்பட அவர் விசேட பணிக்காக அனுப்புகின்றார்.
– எசாயா இறைவாக்கினர் ஆலயத்தில் ஆராதனையில் ஈடுபட்டிருந்தபோது கண்ட காட்சியின்போது தமது அழைப்பைப் பெற்றார்.
– எரேமியாஸ் இறைவனின் செய்தியினூடாக தமது அழைப்பைப் பெற்றார். ''தாய் வயிற்றில் உன்னை உருவாக்கு முன்பே அறிந்திருந்தேன் நீ பிறக்கு முன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன் மக்களினங்களுக்கு இறைவாக்கினனாக உன்னை ஏற்படுத்தினேன்''.
– எசாயா இறைவாக்கினர் தமது அழைப்பை ஏற்றுக்கொள்ள விருப்பமற்றவர் என எடுத்துக்காட்டுவது ''ஐயோ நான் அழிந்தேன் ஏனெனில் தூய்மையற்ற உதடுகளைக் கொண்ட மனிதன் நான் தூய்மையற்ற உதடுகள் கொண்ட மக்கள் நடுவில் வாழ்பவன் நான் படைகளின் ஆண்டவராகிய அரசரை என் கண்கள் கண்டனவே'' என்றேன்.
– ஏரேமியா இறைவாக்கினர் தமது பலவீனத்தை இவ்வாறு வெளிப்படுத்துகின்றார். என் தலைவராகிய ஆண்டவரே எனக்குப் பேசத் தெரியாதே சிறுபிள்ளைதானே என்றேன்.
– எசாயாவின் துாய்மையற்ற உதடுகள் இறைத்தூதரினால் துாய்மையாக்கப்பட்டது.
– இறைவன் எரேமியாவைத் தைரியப்படுத்தி தம் கையை நீட்டி எரேமியாவின் வாயைத் தொடுகின்றார்.
– துாய்மையாக்கப்பட்ட எசாயாவுக்கு கடின இதயமுள்ள, உண்மைக்குக் குருடான நன்மைகளைக் கேட்க முடியாத மந்தமுடையவர்கள் மட்டில் அவரை அனுப்புகின்றார்.
– எரேமியா இறைவாக்கினர் பிடுங்கவும், தகர்க்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும், நடவும் இன்று மக்களினங்கள் மேலும் அரசுகள் மேலும் பொறுப்பாக அவரை அனுப்புகின்றார்.
– எசேக்கியேலின் காட்சி புயலாக, சுடர் வீசும் தீப்பிழம்பாக, துலக்கப்பட்ட வெண்கலமாக, இறைவனின் மகிமையுடனான உருவத்தை அவர் கண்டார்.
– அப்பொழுது தம் தலையைத் தூக்கிக்கொண்டார். ''தமது உறைவிடத்தில் வாழுகின்ற இறைவனின் மகிமை போற்றப்பெறுவதாக'' என்ற சத்தம் அவருக்குக் கேட்டது.
– அப்போது ஆவி என்னைத் தூக்கிக்கொண்டு சென்றது. நானோ மனம் கசந்து சினமுற்றுச் சென்றேன். ஆனால், ஆண்டவரது ஆற்றல்மிக்க கைவண்ணம் என்மேல் இருந்தது.
– அப்பொழுது நான் என் வாயைத் திறந்தேன். ஒரு சுருளேட்டைத் தின்ன எனக்குக் கொடுக்கப்பட்டது ''மேலும் அவர் என்னை நோக்கி 'மானிடா' நான் உனக்குத் தருகின்ற இச் சுருளேட்டைத் தின்று உன் வயிற்றை நிரப்பு'' என்றார். நானும் தின்றேன். அது என் வாயில் தேன் போல் இனித்தது.
– மானிடனே முட்புதர்களும் நெருஞ்சில்களும் உன்னைச் சூழ்ந்திருந்தாலும் தேள்களுடன் சீவிக்க நேர்ந்தாலும் அவர்களின் சொற்களைக் கேட்டு நடுங்காதே, என் சொற்களை அவர்களுக்கு எடுத்துக்கூறு.
– நான் உன்னை ஏற்றுக்கொள்ளாத புரியாத மொழிகளைப் பேசுகின்ற உயர்ந்த மக்களிடையேயன்று உண்மையிலே நான் உன்னை அவர்களிடம் அனுப்புவேன். அவர்கள் உனக்குச் செவிமடுப்பார்கள். எசா.42:1–9, 49:1–9, 50:4–9, 52:13, 52:12

**ஆ.** – அவர் இறை ஏவுதலைப் பெற்றுள்ளார்.
– எல்லா மனிதருக்கும் நீதியைக் கொணருவார்.
– அவர் அமைதியாக துன்பங்களைச் சகித்துக் கொள்வார்.
– துன்புறும்போது ஆறுதலைக் கொடுப்பார்.
– ஒருவரும் மனம் தளரமாட்டார்கள் அதைரியப்படமாட்டார்கள்.
– எதிர்பார்ப்புக்கள் நிறைவுறும் வரை பொறுமையுடன் இருப்பார்.
– மற்றவர்களின் பாவங்களுக்காக தமது கஷ்டங்க்ளைப் பொறுத்துக்கொள்வர்.
– இறைவனை விட்டு விலகிச் செல்வது இல்லை.

**விடை 5**

**அ.** – கிறிஸ்துவின் சீடரானவன் தமது தந்தைக்கும் தாய், மனைவி, பிள்ளைகள் சகோதர சகோதரிகளை விட தனது உயிரையும் விட கிறிஸ்துவை அன்புசெய்ய வேண்டும்.
– தமது சிலுவையை சுமந்து கொண்டு கிறிஸ்துவைப் பின்பற்றுபவராக இருக்க வேண்டும்.
– தாம் கிறிஸ்துவின் சீடராவதைப்பற்றி ஆழமாகச் சிந்திக்கவேண்டும்.
– தீமைகளை எதிர்த்துப் போராடுவதற்கு ஆன்ம சக்தியுடைவராக இருக்கவேண்டும்.
– கிறிஸ்துவுக்காத் தம்மிடமுள்ள எல்லா வற்றையும் இழக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

**ஆ.** – சாதாரண சீடன் சமுதாயத்தில் சமுதாயத்தின் மீது மகிழ்ச்சி அடைவர்.
– கிறிஸ்தவன் இறைஅருளை வேண்டி தாழ்ந்த மனதுடன் செயலாற்றுவார்.
– சாதாரண நபர்கள் கஸ்டதுன்பங்களை துரதிர்ஷ்டமாக கருதுவர் எனினும் கிறிஸ்தவன் கஸ்டதுன்பங்களினூடாக விடுதலையைப் பெற்றுக்கொள்ளலாம் என ஏற்றுக் கொள்வர்.
– சாதாரண மக்கள் அகந்தை இறுமாப்பு கல்வியறிவினால் தம்மைப் பெருமைப்படுத்திக் கொள்வர் எனினும் கிறிஸ்தவன் இறைவன் முன்னிலையில் மற்றவர்கள் முன்னிலையில் தமது நிலையை ஏற்றுக்கொண்டு தாழ்மையுடயவராகச் செயற்படுவர்.
– சாதாரண சீடன் வெளி ஆடம்பரங்களுக்கு முதலிடம் கொடுப்பர் எனினும் கிறிஸ்தவன் ஆன்மீகத்துக்கு முதலிடம் கொடுத்து செயலாற்றுவார்.
– சாதாரண சீடன் அநேகமாக மற்றவனைப் பற்றி. அநியாயத் தீர்ப்பிடுவர் அயலவர் யாராகிலும் அவர்களது தேவையை உணர்ந்து கருணைகாட்டுவர்.

**விடை 6**

மரித்தோரை உயிர்ப்பித்தல் – *நயீன் நகர கைம்பெண் மகன் உயிர் பெறுதல்*
– பாவத்தின் பிரதிபலனான மரணத்திற்கு மனிதன் கீழ்ப்பட்டிருக்கின்றான். மனிதனுக்கு தமது சுய சக்தியால் மரணத்தை வெல்லமுடியாது.
– எனினும் நயீன் ஊர்க் கைம்பெண்ணின் மகளில் உயிர்த்தெழுந்த சம்பவத்தினூடாக கிறிஸ்து மரணத்தின் வல்லமையை, தேவ ஆதிக்கத்தை கீழ்ப்படித்துக்கொண்டு மரித்த இளைஞன் இறைவார்த்தையின் பலத்தினால் உயிர்த்தெழச் செய்தார்.
– வாழ்வினதும், மரணத்தினதும் தேவ ஆதிக்கம், இறைவார்த்தையில் உள்ளது.
மாற்கு. 1: 21–28 தீயஆவி பிடித்தவரைக் குணப்படுத்தல்
– ஒருநாள் கிறிஸ்து கப்பர்நாகும் ஊரில், தொழுகைக் கூடத்தில் கற்பித்துக் கொண்டிருந்தார். தொழுகைக் கூடத்தில் தீயஆவி பிடித்த ஒருவர் இருந்தார்.
– அவர் ''நாசரேத்து யேசுவே உமக்கு இங்கு என்னவேலை? எங்களை ஒழித்திடவா வந்தீர்? நீர் யாரென எனக்குத் தெரியும். நீர் கடவுளுக்கு அர்ப்பணமானவர்'' எனக் கத்தியது.
– யேசு அதனை ''வாயை மூடு இவரை விட்டுவெளியே போ'' என்று அதனை அதட்டினார். அப்பொழுது அத் தீயஆவி பெருங் கூச்சலிட்டு அவரை விட்டு வெளியேறிற்று.
– இதைக்கண்ட அனைவரும் திகைப்புற்றனர்.
– இவர் அதிகாரம் கொண்ட ஒருவர் எனக் கதைத்தனர். கட்டளையிட்டவுடன் தீய ஆவி கீழ்ப்படிகின்றதே என பேசிக்கொண்டனர்.
– தீய ஆவியின் ஆதிக்கத்தை தோல்வியடையச் செய்து இறை ஆதிக்கம் கட்டியெழுப்பப்பட்ட விதம் இதில் கூறப்பட்டுள்ளது.

*(அடுத்த இதழில் தொடரும்...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் அறிமுகம்

## கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்




வெளியீடு: கத்தோலிக்க மாணவர் ஒன்றியம், நல்லாயன் நிலையம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

*28.02.2001. பக்கம் 140, விலை 150 ரூபா (இலங்கை)*

**ஆசிரியர்**
**ஞானமுத்து விக்ரர் பிலேந்திரன்**

வியாகுல பிரசங்கம் என்றழைக்கப்படும் பசாம் பக்தி இலக்கியத்தில் ஆய்வுக்குரிய இறையியற் சிந்தனைகளா? அதில் நாடகப் பாங்கா? நாட்டார் இலக்கிய இசை மரபுகளா? அற்புதமாயிருக்கிறதே!

ஆச்சரியம் வேண்டாம் என்பதை தெளிவுபடுத்துகிறது. அருள்திரு ஞானமுத்து விக்ரர் பிலேந்திரனின் தவக்கால பக்தி வழிபாட்டு கலை இலக்கியம் சார் ''கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்''

### நூலாசிரியர் சவால்!

ஈழக் கத்தோலிக்கரின் வேர்களைத் தேடி அவர்கள் காலம் காலமாக பயன்படுத்தி வரும் தமிழ் வழிபாட்டு இலக்கிய கலை ஊடகங்களை மணம் பிடித்து ஆய்வுகளாக்கும் பணியில் வல்லவர் ஞானமுத்து விக்ரர் பிலேந்திரன் அடிகள். அவரின் முன்னைய நூல்கள் இதற்குச் சான்று.

பல்கலைக்கழக ஆய்வுகள் பரீட்சார்த்தங்களின் பயன்பாடு கல்வியாளர்களைக் கடந்து சாதாரண மக்களை அடையவேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியானவர் இவர். இந்நூல் இதற்குக் கட்டியம். இவ் இலக்கிய ஆய்வு இதை வாசிக்கக் கேட்கும் பொதுநிலையினர் தமது இறையியல் சிந்தனைகளை ஆழமாக்கும் மறைக்கல்வி ஊடகம் என்பதையும் உறுதிப்படுத்த உதவுகின்றது.

### நூல் நோக்கு

''இதோ மனிதன்'' (Ecce Homo) என்ற விவிலிய வார்த்தைக்கு ஓவியப் பொருத்தம் பார்க்கும் அழகிய முகப்பு!

கடந்த 290 ஆண்டுகளாக ஈழக் கத்தோலிக்கர்களால் தவக்காலத்தில் அதிகம் விரும்பிப் பாடப்பட்டு தியானிக்கப்பட்டு வருகிறதும், பசாம் என்று அழைக்கப்பட்டு இன்றுவரை வெகுசன இலக்கியமாகப் பேணப்படுகிறதும், உரைநடையிலுள்ள் வாசகர் செய்யுள் நடைக்கு மெட்டு வழங்கி ஒருவர் வாசிக்க பலர் கேட்கும் சிறந்த கலைக் களஞ்சியமும், ஒல்லாந்தர் காலத்தில் கோவையில் இருந்து வந்த முனிவராகிய யாக்கோமே கொன்சல்வேஸ் அவர்களால் இயற்றப்பட்டதுமான வியாகுல பிரசங்கம் வழிபாட்டு நூலை ஆசிரியர் பலகோணங்களில் நெருங்குகின்றார்.

**இதில் மூன்று பகுதிகள் உண்டு. முதலாம் பகுதியின் முற்பகுதி :** ஒப்புரவு, தவக்காலம், பக்தி வழிபாடு, விவிலியம், இறையியல் போன்ற மையங்களில் இவ் இலக்கியங்களைப் புடமிடுகிறார். தெளிவுகாண்கிறார். இலைமறைகாயான இறையியல் வளங்களை வெளிக்கொணர்கிறார் நூல் ஆசிரியர்.

– வியாகுலப் பிரசங்கத்தை ஆக்கிய யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளின் பிறப்புத் தரவுகள்... (பக்கம் 5) பிராமணர் குலத்தில் பாரம்பரிய கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்தார்.. கத்தோலிக்கர்களாக மாறிய பின்னும் சாதியம் தக்க வைக்கப்படுவது என்ற படிமம்! இது சாதியத்தின் இருப்பை மேலும் உறுதிப் படுத்துகின்றது. கத்தோலிக்க விழுமியங்களுக்கு ஒவ்வாதது. ஐரோப்பிய புனிதர்கள் அரச குடும்பத்தினரென்றும் – இந்தியாவின் புனிதர்கள், உயர் துறவிகள் பிராமண குலத்தவர்கள் என்பது கிறிஸ்தவ வரலாற்றாளர்களின் தாழ்வுச்சிக்கல்!

**முதலாம் பகுதியின் பிற்பகுதி :(பக்கம் 42-64)** ஈறாக யாக்கோமே கொன்சால்வேஸ் பயன்படுத்திய இலக்கிய பாங்கில்: நாடகப்பாங்கு, கீழைத்தேய நாட்டார்பாங்கு, ஆன்மீக உளவியற்பாங்கு புலப்படுகிறது. நிகழ்வுகளும் பாத்திரங்களும் சூழமைவாக்கம் செய்யப்பட்ட பண்பாட்டு மயமாக்கலால் இவ் இலக்கியம் உயிரோட்டமுள்ளதாகத் திகழ்கின்றது.

இலங்கையில் முதன்முதல் கிறிஸ்தவத்வைப் பரப்பிய மிசனறிமார்...(பக்கம் 61) போர்ச்சுக்கேய மறைபரப்பாளர் இலங்கை வருவதற்குமுன் கிறிஸ்தவம் இங்கு ஊடுருவியிருந்ததற்குச் சான்றுகள் பல... ''முதன்முதல்'' ஆய்வுக்குரியது...!

**இரண்டாம் பகுதி :(பக்கம் 67-97)** தவக்கால பன்முகசார் மரபுகள்: நோன்பு, சிலுவைப் பாதை பக்தி முயற்சிகள் அத்துடன் பாடுகள், உயிர்ப்பு நாடகங்கள், பாசோ போன்றவற்றின் தோற்றம் வளர்ச்சி உள்ளடக்கப்பட்டுள்ளது. இவ் வரலாற்றுப் பின்புலம் பங்குகளில் திருப்பாடுகளின் காட்சி நடத்தும் ஆர்வலர்களுக்கு படைப்பாற்றலை வழங்கத் துணைபோகும் என்பதில் சந்தேகமில்லை.


**மூன்றாம் பகுதி : முற்பகுதி** வடஇலங்கையில் கத்தோலிக்க மறைபணியாளர் நற்செய்திப் பகிர்விற்குப் பயன்படுத்திய நாடக ஊடகங்கள்: குறிப்பாக பாசோ உடக்குபாஸ், திருப்பாடுகளின் காட்சி போர்ச்சுக்கேய நாடக மரபிலிருந்து உள்வாங்கப்பட்டுள்ளது. சிங்கள கத்தோலிக்கர் மத்தியில் உருவான நாடக மரபுகள் பற்றிய ஆய்வுகள் பல உருவான போதிலும் தமிழ்க் கத்தோலிக்க அரங்கில் குறைவென்றே கூறலாம். ஆசிரியரின் பங்களிப்பு இவ் ஆய்வுப்போக்கை ஊக்குவிக்கும் என நம்பலாம்.


**மூன்றாம் பகுதியின் பிற்பகுதி (பக்கம் 112-129)** இளைப்பாறிய பேசாலை அதிபர் அந்தோனி மிறாண்டா அவர்களது பேசாலை பாரம்பரிய உடக்கலான திருப்பாடுகளின் காட்சி என்ற ஆய்வுக் கட்டுரையுடன் இந்நூல் நிறைவடைகிறது. உடக்குப்பாஸ் அல்லது பொம்மைகள் கொண்டு காட்சிகள் அமைக்கும் மரபு வட இலங்கை மக்களுக்கு உரித்தானது– இது யாழ்ப்பாண மரபுசார் என்றும் அழைக்கப்படுகிறது. இது ஈழக்கத்தோலிக்க பாரம்பரிய வேர்களை மீள் கண்டுபிடிப்பு! இதைப் பாதுகாத்து உயிர்கொடுத்துவரும் பேசாலை பங்கு மக்களை ஈழக் கத்தோலிக்கர் என்றும் பாராட்டுடன் நினைவுகூர்வர்.

**அருட்கலாநிதி அ.பி யெயசேகரம்**

# மரணத்தை வென்ற மாபரன்

## கரவைப் பங்கில் திருப்பாடுகளின் காட்சி





''மரணத்தை வென்ற மாபரன்'' என்னும் திருப்பாடுகளின் காட்சி அண்மையில் கரவை புனித அந்தோனியார் ஆலயத்தில் சிறப்பாக மேடையேறியது. கரவை கத்தோலிக்க இளைஞர் மன்ற உறுப்பினர்களில் ஐம்பதுக்கும் மேற்பட்ட இளங்கலைஞர்கள் இதில் பங்கெடுத்துக் கொண்டனர். இந் நாடக மேடை ஏறக்குறைய 100 அடிகளைக் கொண்டிருந்தது. **இந் நாடகத்தை மறையாசிரியர் இ. ம.ஜெயசீலன் நெறிப்படுத்தியிருந்தார். நாடகத்தின் பாடல்களை அருள்திரு கிருபாகரன், அருள்திரு றெக்ஸ் சவுந்தரா ஆகியோர் இனிமைமிகு பாடல்களாக இசைக்கப் பின்னணி இசைக் கருவி ''ஓகன்''ஐ அருள்திரு அன்ரனி பாலா மிக அழகாக மீட்டி பாடல்களுக்கு மெருகுபடுத்தியிருந்தார். நடிகர்கள் ஒவ்வொருவரும் தத்தம் பாத்திரத்தின் பொறுப்புணர்ந்து மிகச் சிறப்பாக நடித்திருந்தனர்.**

ஆரம்ப நிகழ்வாக கலைஞர்கள் அனைவரும் ஆலயத்தினுள் சென்று அருள்தந்தையர்கள் சகிதம் இறைவழிபாடு செய்தனர். அதனைத் தொடர்ந்து மேடையில் பங்குத்தந்தை எம். யேசுரட்ணம் அடிகள் தலைமையில் அருள் தந்தை சூசைநாதர் அருளுரை வழங்கினார். மக்கள் வெள்ளம் அலைஅலையாக ஆலய வளவை நிறைத்து வெளிவீதியெங்கும் கடல் போலக் குவிந்திருந்தனர். நாடகத்தின் ஒவ்வொரு காட்சியும் உயிர்த்துடிப்புள்ளனவாய் மக்கள் உள்ளங்களை ஊடுருவி அமைதியானதோர் சூழலை உருவாக்கி நின்றன. ஒலியும் ஒளியும் இதற்கு மிகத்துணையாய் அமைந்தன. பின்னணிக்குரல் கொடுத்த ஜோர்ஜ் அடிகளாரின் சிம்மக்குரல் அற்புதமாய் அமைந்திருந்தது.

**கரவைப்பங்கு இதுவரை காணாத ஒரு அற்புதப் படைப்பு மரணத்தை வென்ற மாபரன். பிறசமய மக்கள் பலர் பார்த்துப் பரவசமெய்திய தெய்வீகக் கதையை நெறிப்படுத்திய ஆசிரியர், இளங்கலைஞர்கள் போற்றப்பட வேண்டியவர்கள்.**

*எஸ். யேசுநாயகம்*
*கரவெட்டி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயராத உழைப்பும், அர்ப்பணிப்பும், தியாகசிந்தையுமுள்ள சேவையாளன் அருள்தந்தை மைக்கல் சவிரிமுத்து அ.ம.தி.

## - அமலமரித் தியாகிகளின் யாழ். மாகாண தலைவர் அ. ஜீவேந்திராபோல் அடிகள் -



மே 29ம் திகதி மைக்கல் சவிரிமுத்து அ.ம.தி அடிகளாரின் ஓராண்டு நினைவு திருப்பலியை புனித அன்னம்மாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுத்த பின்னர் ஜீவா போல் அடிகளார் ''அருள்தந்தை மைக்கல் சவிரி முத்து அயராத உழைப்பும், அர்ப்பணிப்பும், தியாக சிந்தையுமுள்ள ஒரு சேவையாளன்'' என்று தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கும்போது ''எமது சபையின் ஸ்தாபகர் ஏழை, எளியோரில் அன்புகொண்டது போல இவரும் ஏழை, எளியோரின் நல்வாழ்வுக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். தனது வாழ்வின் பெரும்பகுதியை கொழும்பு வாழ் தமிழ் மக்களின் மறை, மொழி, கலை, கலாசாரம், பொருண்மியம், சுகவாழ்வு, அரசியல் போன்ற துறைகளின் மேம்பாட்டிற்காக கடுமையாக உழைத்தார். வணக்கத் தலங்கள், ஆலயங்களை புனரமைப்பித்தார்.

இவரது அர்ப்பண சேவைக்கும் தியாகத்துக்கும் கொழும்பு வாழ் தமிழ் மக்களே சாட்சிகள். மைக்கல் சவிரிமுத்து அடிகளார் ஏழைகளை சந்தித்து அவர்களது இன்ப துன்பங்களில் தன்னையும் ஒருவராக இணைத்துக்கொள்வார். தெருவோரத்து ஏழைகளை அரவணைத்தார். அவர்களது உணவு, உடை, உறைவிடம் போன்ற அத்தியாவசிய சேவைகளை நிறைவுசெய்தார். சிலவேளைகளில் காலில் செருப்புமின்றி சேரிப் புறங்களில் நடமாடுவார். மக்களின் துன்பத்தை தன் துன்பமாக உணர்ந்தவர். சேரிவாழ் மக்களின் நல்வாழ்வில் கூடிய அக்கறை கொண்டவர். அவர்களுக்கு கல்வி அறிவூட்ட அறிவிடங்களை தோற்றுவித்தார். **தனது பணிவாழ்வின் இறுதிக்கட்டமாக இன முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக யாழ். மண்ணில் பளைப் பகுதியில் மாதிரிக் கிராமங்களைத் தோற்றுவித்தா. திரேசம்மாள்புறம், சவேரியார்புறம், ஞானப்பிரகாசர் ஆச்சிரமம் போன்றவை இவரது பிற்காலப் பணிகளின் சுவடிகளாக இருக்கின்றன.** இப் பகுதியில் 3 ஆலயங்களைக் கட்டி நலிவடைந்த மக்களின் ஞானவாழ்வை உயர்த்தினார். பல தென்னந்தோப்புக்களை உருவாக்கி கிராம மக்களுக்கு வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தி அவர்களின் அன்றாட வாழ்வின் ஊதியத்திற்கு வழி செய்தார். தன்னுடைய இப் பணி தொடர்ந்து எடுத்துச்செல்ல வேண்டுமென்று தனது இறுதிக் காலத்தில் இவர் ஆசித்தார். இவருடைய தரிசனப் பார்வையும் தூரநோக்கும் கொண்ட பணி தொடர்ந்தாற்றப்பட வேண்டும் என்றார்.

ஜீவாபோல் அடிகளார் தொடர்ந்தும் தெரிவிக்கும் போது **செக்கட்டித்தெரு புனித அன்னம்மாள் பங்கின் ஸ்தாபகரும் முதல் பங்குத்தந்தையுமான மைக்கல் சவிரிமுத்து அடிகளாரின் ஞாபகமாக ஆலய முன்றலில் உள்ள தற்போது கன்னியர் வசிக்கும் நிலையம் அர்ப்பணிக்கப்படுவதோடு அவரின் பெயரால் ஏழை மக்களுக்கான நிதி உதவித் திட்டமொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பங்கு மக்களின் நன்றி மிகுந்த இந்த ஞாபகப் பணியினை பங்குத்தந்தையின் அனுமதியோடு பங்குமக்கள் செய்திருப்பது பாராட்டுதற்குரியது என்றார்.**

# தமிழ் கூறும் நல்லுலகம் தாவீதடிகளின் பணியை நினைவுகூர வேண்டும்

பிரான்சீஸ் சென் றோச் (துரை ஆரோக்கியதாசன்)
B.A (Cey), Sp.Trd., Dip.inT.M., Dip. in Ed.

*01.06.1981ம் ஆண்டு யாழ். பொதுநூலகம் தீக்கிரையானபோது தமது 74வது வயதில் மரணமான பன்மொழிப் புலவர் தாவீதடிகளின் 20வது ஆண்டு நிறைவு தினம் 01.06.2001 ஆகும். சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியின் ஒப்பற்ற மேதை. யாழ். பத்திரிசியார் கல்லூரியின் தலைசிறந்த ஆசிரியர். மனிதநேயமிக்க ஒரு மாமனிதன். 33 மொழிகளில் வல்லுநராகவும் 100ற்கு அதிக மொழிகளில் பரிச்சயமுடையவராகவும் விளங்கிய இவரை அஞ்சலிக்கும் முகமாக இக்கட்டுரையை பிரசுரிக்கிறோம். (ஆர்)*



எழில்மிக்க செவ்விளநீர் நிறம், புன்னகை பூத்துப் பொலிவோடு விளங்கும் முகம், ஞானக்குறியாகத் தோன்றும் வெண்ணிறக் குறுந்தாடி, அறிவொளி அவாவும் கண்கள், எடுப்பான கூரியமூக்கு, ஈகையில் வள்ளல், பாரியை மிஞ்சும் கரங்கள். உருவத்தில் குறுமுனி அகத்தியர். நெப்போலியன் போன்று அபூர்வ ஞாபகசக்தி மிக்கவர். நேரத்தை உயிர்போன்று செயலுருவப்படுத்தியவர். ஒழுங்கும், சிக்கனமும் இவருக்கு இரு கண்கள் போன்றவை. மனித கணனியாகவும், நுண்ணறிவுமிக்க நடமாடும் பல்கலைக்கழகமாகவும் திகழ்ந்தவர். துறவியின் இடது கரத்தில் 'ரெனீஸ்' வீரனைப் பிரதிபலிக்கும் 'றக்கெற்' வலது கரத்தில் உத்தம மரியாளின் வீரவாள் ஆகிய திருச்செபமாலை. ஒருமுறை பார்த்தாலே நெஞ்சில் நிறைந்திடும் தோற்றப் பொலிவு. உந்துசக்தி மிக்க ஆளுமை (Dynamic Personality) இவற்றின் ஒட்டுமொத்தமே தாவீதடிகள் என்பது வெள்ளிடைமலை.

1981.06.01 நடுஇரவில் யாழ். நூலகம் தீக்கிரையானது. அதிலுள்ள விலைமதிப்புக்குரிய 97,000 நூல்களும் அரச நாசகாரர்களால் நாசமாயின. யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி மேல்மாடிக் கட்டடத்திலுள்ள மேற்குப் பக்க அறையில் வாழ்ந்து கொண்டிருந்த 74வயதுடைய தாவீதடிகள் இதைக் கண்ணுற்றதும் பேரதிர்ச்சியினால் உயிர் துறந்தார்.

பிதா லோங், தாவீதடிகள் ஆகிய பேரறிஞர்களின் ஆன்மா சாந்தி பெற யாழ். நூலகம் உயிரூட்டம் பெற இலங்கை அரசும் தமிழ் மக்களும் பங்கெடுப்பது முக்கிய கடமையாகும். யாழ். நூலகத்தில் ஒரு பகுதியில் தமிழ் ஆய்வகம் உருவாக்கப்பட்டு நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், கலாநிதி தாவீதடிகள் ஆகியோரின் சகல ஆய்வு நூல்களும் ஏனைய அறிஞர்களின் ஆய்வுக்குரிய நூல்களும் இடம்பெறுவதோடு இதனால் தாவீதின் பணி தொடர வழிபிறக்கும்.

**தேசிய ஒருமைப்பாட்டுக்கு உழைத்து பலியான தாவீதடிகளை கௌரவித்து அரசு முத்திரை வெளியிட வேண்டும். யாழ். பல்கலைக்கழகம் புத்திஜீவிகளின் குழு மூலம் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி முற்றுப்பெற வழிசெய்வது தமிழ் அன்னைக்கு செய்யும் முக்கிய பணியாகும்.**

# மணற்காடு புனித அந்தோனியார் புதிய பங்கின் முதலாவது திருவிழா



வடமராட்சியின் உதயத்திசையாக விளங்குவது வடமராட்சி கிழக்கு. வடமராட்சியில் இருந்து சுமார் 7கிலோ மீற்றர் தூரத்திலே உள்ள அழகிய கிராமம் தான் மணற்காடு. இங்கே நெய்தல், முல்லை, மருதம் ஆகிய நிலங்களிற்கு நடுவே இருந்து இம் மக்களிற்கு புனித அந்தோனியார் அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றார். இவ் ஆலயமானது பழம்பெரும் வரலாற்றைக் கொண்டது. ஒல்லாந்தர் கரையோரங்களை ஆட்சிசெய்த காலத்தில் இங்கே இவ் ஆலயம் எழுப்பப்பட்டது.

இப் புனித அந்தோனியார் ஆலயமானது ஏறக்குறைய 200 வருடங்கள் பழமைவாய்ந்த ஆலயமாகும். இங்கு ஏற்பட்ட அனர்த்தம் காற்று, மழை காரணமாக இவ் ஆலயமானது இருந்த இடமே தெரியாமல் மணலினால் மூடப்பட்டது. இங்கு ஆரம்பத்தில் சுமார் 30 குடும்பங்களே இருந்தன. **எமது புனித அந்தோனியர் ஆலயத்தில் இறுதித் திருப்பலி 1933ம் ஆண்டு ஒப்புக்கொடுக்கப்பட்டதாக இவ்வூரில் உள்ள முதியவர்களால் அறியமுடிகின்றது. இன்று இவ்வாலயம் இருந்த இடமே தெரியாமல் மணலினால் மூடப்பட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது.**

மணலால் இவ் ஆலயம் மூடப்பட்டதால் இம்மக்கள் ''கோயில் இல்லா ஊரில் குடியிருக்கக்கூடாது'' என்பதற்கு இணங்க அயராது உழைத்து இங்கு இப்பொழுதும் மூலவளமாகத் திகழும் மணல் மண்ணை விற்று அதன்மூலம் கிடைக்கும் வரி வருமானத்தைக் கொண்டு 1934ம் ஆண்டுக் காலப்பகுதியில் கடற்கரையோடு அண்டிய நெய்தல் நிலத்திலே இவ் ஆலயம் எழுப்பப்பட்டது. இப் புதிய ஆலயத்தில் இற்றைக்கு 67 வருடங்களாக அந்தோனியார் அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றார். எமது மக்கள் எந்தவொரு குறையுமின்றி வாழ அந்தோனியாரின் அருளே காரணமாகும்.

1937ம் ஆண்டுப் பகுதியில் இவ் ஆலயமானது மேலும் புனருத்தாரணம் செய்யப்பட்டது. இக் காலப்பகுதியில் இவ் ஆலயத்திற்கு பங்குத்தந்தையாக இருந்தவர் அல்போன்ஸ் அடிகளாவர். இவ் ஆலயம் ஆரம்பத்தில் பருத்தித்துறைப் பங்கின் கீழேயே இருந்தது. அல்போன்ஸ் அடிகளார் ஆரம்பத்தில் கடல் மார்க்கமாகவும் பின்னர் தரை மார்க்கமாக, கால்நடையாக வந்து திருப்பலிப் பூசைகளில் ஈடுபட்டார்.

இன்று 1990ம் ஆண்டுகளிற்கு பின்னர் இவ் ஆலயத்தை நோக்கினால் இங்கு ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம் காரணமாக 1996ம் ஆண்டு காலப்பகுதியில் பல மக்கள் இடம்பெயர்ந்தனர். அவ்வேளையிலும் இடம்பெயர்ந்த மக்கள் ஆரம்பத்தில் இவ் ஆலயத்தில் தஞ்சம் புகுந்திருந்தனர். அவர்களை அந்தோனியார் எவ்வித இடையூறுமின்றி வல்லமையால் காப்பாற்றினார்.

66 வருடங்களாக பருத்தித்துறைப் பங்கின் கீழ் இருந்த இவ் ஆலயம், 2000ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 13ம் திகதி மணற்காடு எனும் தனிப்பங்காக மாற்றப்பட்டது. இதன் முதல் பங்குத்தந்தையாக அன்ரன் ஜோர்ஜ் அடிகளார் நியமிக்கப்பட்டார். இன்று இப் பிரதேசத்தில் ஏறக்குறைய 300 குடும்பங்கள் இவ் ஆலயச் சுற்றாடலில் வாழ்கின்றனர். இங்கு வாழும் நூறுவீதமான மக்களும் கிறிஸ்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

இவ் ஆலயமானது கிறிஸ்தவ மதத்தவரிலும் பார்க்க இந்துக்களுக்கு அதிக புதுமைகளைக் காட்டிவந்தார். காணாமற்போன பொருட்களைக் கண்டெடுக்கவும், பிணியாளர்களைக் குணப்படுத்தியும், காணாமற்போனவர்களை மீட்டதாகவும் வரலாற்றுக் கதைகள் கூறுகின்றன.

திருநாள் யூன் மாதம் 1ம் திகதி முதல் 13ம் திகதி திருப்பலியும் கூடு சுற்றலும் இடம்பெறும். அன்றைய தினம் மணற்காட்டுக் கிராமமே விழாக்கோலம் பூண்டிருக்கும். புதிய பங்காக பிரிக்கப்பட்டு தனது முதலாவது திருவிழாவை கொண்டாடுகின்றது.

# வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு

(6ம் பக்க தொடர்ச்சி)

அனுராதபுர ஆயர் மேதகு ஒஸ்வால்ட் கோமிஸ் ஆண்டகை வாழ்த்துரை நிகழ்த்தினார். சிங்கப்பூர் ஆயர் நிலைய உதவிப் பணிப்பாளர் திருமதி வென்டி லோயிஸ், ''புத்தாயிரமாம் ஆண்டிலே தூய ஆவியால் நிரப்பப்பெற்ற கிறிஸ்துவின் சாட்சிகளாவோம்'' என்ற கருப்பொருளில் உரையாற்றினார்.

20ம் திகதி இலங்கை மறைமாவட்ட அனைத்து ஆயர்களும், குருக்களும் ஒன்றுகூடி பேராயர் மேதகு றேமண்ட் பீரிஸ் ஆண்டகையின் தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுத்த காட்சி ஓர் கண்கொள்ளாக் காட்சியாகும். அன்றைய நிகழ்வுகளை மேதகு றேமண்ட் பீரிஸ் ஆண்டகை ஆசியுரை வழங்கி ஆரம்பித்தார். பின்னர் ''பொதுநிலையினரின் மறைத்தூதுப் பணியில் இலங்கைத் திருச்சபையும் அது எதிர்நோக்கும் சவால்களும்'' என்னும் பொருளில் தேசிய செயற்குழுச் செயலாளர் திரு விக்ரர் சில்வா உரையாற்றினார்.

அன்றைய பிற்பகல் நிகழ்ச்சிகள் யாவும் ஆயர் மேதகு மேரியஸ் பீரிஸ் ஆண்டகை தலைமையில் நடைபெற்றன. அடுத்து ''சாதாரண மனிதனின் ஆன்மீகத் தோற்றப்பாடும் – விசுவாசமும்'' என்னும் பொருள் பற்றி இலங்கைக் கத்தோலிக்க ஒன்றியத் தலைவர் திரு நெவில் டி சில்வா உரையாற்றினார். ஏப்ரல் 21ம் திகதி மேதகு வியன்னி பெர்ணான்டோ ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. ஆயர் தமிழிலும் சிங்களத்திலும் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். அன்றைய தினம் மில்றோய் பொன்சேகா அடிகளார் ''திருச்சபையின் தோழமை'' எனும் பொருள் பற்றியும் ''திருச்சபை ஒன்றிணைப்பின் மறைபொருள்'' எனும் பொருள் பற்றியும் உரை நிகழ்த்தினார்.

இறுதிநாள் நிகழ்வில் தேசிய குழுமட்டக் குழுக்களாகவும் மறைமாவட்டக் குழுக்களாகவும் நடைபெற்ற ஏழு பயிற்சிப் பாசறைகளையும் ஆதாரமாக்கொண்ட ஒவ்வொரு குழுவும் தேசியமட்ட முன்மொழிவுகளைக் கையளித்தது. இம் முன்மொழிவுகள் ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் ஆராயப்பட்டு தேசியமட்ட நடைமுறைப்படுத்தலுக்கு ஏற்ற பிரேரணைகள் முன்மொழிந்து, வழிமொழியப்பட்டன. பின்பு ஒவ்வொரு மறைமாவட்டத் திட்டங்களும் மறைமாவட்டச் செயலாளரால் வாசித்துக் காட்டப்பட்டது. அடுத்து ஆயர் மேதகுஎல்மோ பெரேரா ஆண்டகை நன்றியுரை வழங்கதேசிய பொதுநிலையினர் மகாநாடு இனிதே முடிவுற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர்

# அருட்கலாநிதி யஸ்ரீன் ஞானப்பிரகாசம் அடிகளாருடன் ஓர் நேர்காணல்

**ஆன்மீகப் பணியிலும் அறிவியல் பணியிலும் 25 ஆண்டுகளை இறை மகிமையில் பூர்த்திசெய்துள்ள தங்களுக்கு வாசகர் சார்பான வாழ்த்துக்கள். இளவாலைச் சமூகத்திற்குப் பலவழிகளிலும் பெருமை தேடித்தரும் புனித கென்றியரசர் கல் லூரியின் அதிபராக பணியாற்றும் தாங்கள் இக் கல்லூரிக்கு வருகை தந்தது பற்றியும் அதன் ஆரம்பகாலம் பற்றியும் கூறமுடியுமா?**

முன்னாள் ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகையின் காலத்தில் உப அதிபராக நியமனம் பெற்று இக் கல்லூரிக்கு 1976 ஜுன் மாதத்தில் வருகை தந்தேன். அப்போது இக் கல்லூரி ஆயரின் மேற்பார்வையில் தனியார் கல்லூரியாக இயங்கியது. பின்னர் 1977இல் அரசாங்கப் பாடசாலையாகக் கையளிக்கப்பட்டது. எனவே தொடர்ந்தும் அரசசேவையில் இணைந்து பணியாற்றி வருகின்றேன்.

நான் இங்கு வருகை தந்தவேளையில் அதிபராக இருந்தவர் அருள்தந்தை அன்ரன் இராஜநாயகம். நான் அவரது மாணவரும் கூட. ஆகவே என்னை அறிந்து புரிந்துணர்வுடன் என்னோடு பணிகளில் ஒத்துழைப்பு வழங்கக்கூடிய ஒருவருடன் பணியாற்றுவது எனக்கு இலகுவானதாகவும், அவரது நிர்வாகத்திறமை நல்ல அனுபவமாகவும் இருந்தமையினால் நானும் வளர்ச்சியடையக் கூடியதாக இருந்தது.

1976ல் உப அதிபராகவும் 1989ல் அதிபராகவும் பணியாற்றியுள்ள வேளையில் மாரீசன் கூடல் புனித கயித்தார் ஆலயம், புனித யூதாததேயு ஆலயம், இளவாலை புனித அன்னம்மாள் ஆலயம் ஆகியவற்றில் பங்குத்தந்தையாகவும் பணியாற்றியுள்ளேன். இப்போது மறைக்கோட்ட முதல்வராகவும், யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினராகவும் கடமையாற்றுகிறேன்.

**1989 இல் இக் கல்லூரியின் முழுப் பொறுப்புவாய்ந்த அதிபராகப் பதவியேற்ற போது தங்களின் மனநிலை என்ன?**

முன்னாள் அருள்தந்தை அன்ரன் இராஜநாயகம் அவர்களது பணிக்காலத்தின் பின்பு நான் இவ் அதிபர் பதவியைப் பொறுப்பேற்க வேண்டியமையை எதிர்பார்த்த ஒன்றாக இருந்தமையினால் அதிபர் பதவியை ஏற்பது கடினமாக இருக்கவில்லை. அத்துடன் ஏற்கனவே கென்றியரசர் குடும்பத்திற்குப் பழக்கப்பட்ட ஒருவராக நான் பணியாற்றியமையினால் ஆசிரியர் குழாம் என்னையும் நான் ஆசிரியர் குழாத்தினையும் புரிந்துகொண்டதன் நிமித்தம் பதவியேற்பது கடினமானது ஒன்றாக அமையாது, ஒத்துழைப்பு நிறைந்ததாக அமைந்தது.

அதிபராகப் பொறுப்பேற்ற காலத்தில், கொத்தணி அமைப்பு முறையும் முதல் முதல் அமுலுக்கு வந்தது. அவ் அமைப்பு முறை அனைவருக்குமே புதியது. அதனால் எனது கல்லூரியின் செயல்திட்டங்களுக்குக் கூடிய நேரம் செலவிட முடியாது இருந்தது. ஆயினும் 12 அதிபர்களுடன் பணியாற்றும் நிர்வாக அனுபவத்தினை அடையக் கூடியதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

**தங்களது 25 வருட பணிக்காலத்தில் இக்கல்லூரியின் கல்வி, விளையாட்டு, கலை, ஆன்மீகத்துறையில் தாங்கள் புரிந்த சிறப்பான சேவையைக் குறிப்பிடுவீர்களா?**

*விளையாட்டுத் துறையிலும், கலைத்துறையிலும் எமது கல்லூரி அகில இலங்கை ரீதியாக சாதனை புரிந்துள்ளது. அதாவது உதைபந்தாட்டப் போட்டிகளிலும், நாடக , இசை நிகழ்ச்சிப் போட்டிகளிலும் வெற்றியீட்டியுள்ளது. கல்வித்துறையில் அண்மைக் காலத்தில் பொறியியல் துறையில் அகில இலங்கை ரீதியில் முதல் மாணவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒக்ஸ்வேட் பல்கலைக்கழகத்திற்கும் எமது மாணவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. உலக சாதனை புரிந்த வீரரும் உளர். ஆன்மீகத்துறையில் பல மாணவர்கள் குருக்களாக உருவாகி உள்ளனர். சுருங்கக் கூறின் ''எனது பணிக்காலத்தில் விதைப்புச் செய்ததை எனது பணிக்காலத்திலேயே அறுவடை செய்யக்கூடிய அருளையும் வாய்ப்பினையும் அளித்தமை எனது பணிக்கு இறைவன் அளித்த பரிசு என்றே கூறவேண்டும்''.*

**தங்களது பணிக்காலத்தில் இக்கல்லூரி இடம்பெயர்விற்குள்ளான போது அதனைத் தனித்துவமாக இயங்க வைப்பதில் எதிர்கொண்ட சவால்களைப் பற்றிக் குறிப்பிட முடியுமா?**

''1992ல் இக்கல்லூரி இடம்பெயர்விற்குள்ளானபோது இக் கல்லூரியின் மாணவர்கள் பெரும் பொருளாதாரக் கஷ்டத்தை, இடநெருக்கடியை எதிர்நோக்க வேண்டியிருந்ததும், பெற்றோர்களிடையேயும் பொருளாதார வசதி வாய்ப்புக்கள் குன்றியிருந்தமை, தனித்துவமாக இயங்க வைப்பதில் இன்னல்களை எதிர்நோக்க வேண்டியிருந்தபோதிலும், யாழ். திருச்சபையும், கல்லூரியின் பழைய மாணவர்களும் பக்கபலமாக நின்று தனித்து இயங்குவதற்கு ஆவன செய்தது மட்டுமன்று, பல துறைகளிலும் வளர்ச்சியடைந்து சாதனையும் புரிய வாய்ப்பளித்தனர். மேலும் மக்கள் மத்தியில் எனக்கிருந்த பாரிய ஒத்துழைப்பினையும் நான் மனப்பூர்வமாக உணரக் கூடியதாக அமைந்தது.

**இனிவரும் காலத்தில் இடமாற்றம் ஏற்படின் வேறு இடங்களுக்குப் பணியாற்றச் செல்வீர்களா? அல்லது இங்குதான் தொடர்ந்து பணியாற்றுவீர்களா?**

ஆயர் அவர்களின் விருப்பத்திற்குக் கீழ்ப்படிந்து வேறு இடத்திற்குச் சென்று பணியாற்ற வேண்டியதன் தேவை ஏற்படின் அங்கு செல்லவும் தயாராக உள்ளேன்.

**தங்களது 25 வருட பணிக்கால அனுபவத்தைக் கொண்டு தற்கால மாணவ சமூகத்திற்குக் கூறவிரும்பும் அறிவுரைகளைக் குறிப்பிடமுடியுமா?**

21ம் நூற்றாண்டு காலப்பகுதியில் வாழ்ந்துவரும் இன்றைய மாணவ சமுதாயம் முன்னேற்றம் அடைய பல வழிகள் உண்டு. கல்லூரிப் படிப்பின் பின்பு பல்கலைக்கழகம் தான் என்ற நிலைமாறி, தகவல் தொழில் நுட்பத்தின் (IT) ஊடாகவும், ஆங்கில அறிவினைக்கொண்டும் மாணவர் வளர்ச்சியடைய முடியும். ஆயினும் மாணவர்கள் பல துறைகளிலும் தமக்கு ஏற்ற அடைவினைப் பெற கடின உழைப்புடனும், விடா முயற்சியுடனும் கல்வி, தொழில்நுட்பத்துறையில் முன்னேற்றம் எடுக்கவேண்டும்.

**மூன்று ஆயர்களின் கீழ் தங்கள் குருத்துவ உருவாக்கமும், குருத்துவப்பணியும், கல்விப்பணியும் இடம்பெற்றுள்ளன. இந்த ஆயர்கள் தங்களது ஆளுமை வளர்ச்சிக்கு அளித்த பங்களிப்புப் பற்றி ஏனைய சகோதரக் குருக்கள் உங்கள் பணிக்கு வழங்கிய ஒத்துழைப்புப் பற்றியும் குறிப்பிடமுடியுமா?**

ஆயர் மேதகு எமிலானுஸ்பிள்ளை ஆண்டகை காலத்தில் அருள்சகோதரனாக குருத்துவ உருவாக்கத்தைப் பெற்றேன்.

ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை காலத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு கல்விப் பணிக்காக நியமனம் பெற்றேன்.


ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை காலத்தில் தொடர்ந்து அவரது ஆக்கமும், ஊக்கமுமான ஒத்துழைப்பினால் வளர்ச்சியடைந்துவரும் நான் மூன்று ஆயர்களின் வேறுபட்ட ஆளுமை, அனுபவத்தை என் வாழ்விற்கு அனுபவமாக்கியுள்ளேன். அத்துடன் எனது கல்விப்பணியிலும், பங்குப் பணியிலும் அவ்வப்போது பல குருக்கள் எனக்கு மனமுவந்த ஒத்துழைப்பினைப் புரிந்தும் வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**கல்விப்பணியுடன் ஆன்மீகப் பணியினையும் புரிந்துவரும் தங்களின் ஆளுமை முதிர்ச்சியின் பயனாக பாதுகாவலன் வாசகர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் கூறவிரும்பும் செய்தி என்ன?**

முன்னைய காலத்திலும் பார்க்க பாதுகாவலனின் வளர்ச்சித்துறையில் மிகுந்த மாற்றம் உண்டு. கத்தோலிக்க விசுவாசத்தையும், இறையியல் அறிவையும் வளர்க்கு முகமாக மக்கள் இதனை மிகுந்த ஆழமாகப் படித்து அதன் உண்மைகளைப் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளுவது அவசியம். அத்துடன் எழுத்தாளர்களும் இலங்கைத் திருச்சபையிலும், உலகத்திருச்சபையிலும் அவ்வப்போது இடம்பெறும் நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவை உடனடியாக வாசகர்களைச் சென்றடையக் கூடிய விதத்தில் தரமான ஆக்கங்களை உருவாக்கி அளிப்பதில் முன்னின்று உழைக்க வேண்டும். இதன் வளர்ச்சி மென்மேலும் உயர்ச்சிபெற மாதாந்த இதழ் விரைவில் வாராந்த இதழாக மீண்டும் 125 வது ஆண்டிலாவது வெளிவரவேண்டும் என்பது எனது ஆவல்.

தங்களது 25 வருடகால அறிவியல் ஆன்மீகப் பணிமூலம் திருச்சபைச் சமூகத்திற்கு தாங்கள் ஆற்றிய உன்னத பணியினை தங்களது வேலைப்பழுவினையும் நோக்காது எம்மோடு பகிர்ந்ததன் மூலம் வளரும் சமூகத்திற்குப் பல உண்மைகளையும் அறிவுரைகளையும் வழங்கிய தங்களது ஒத்துழைப்பிற்குப் பாதுகாவலன் சார்பாக நன்றியினையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.

**நேர்முகம்:-** *எஸ்.எம். வுளோறன்ஸ், இளவாலை நிருபர்*



மைக்கல் சவிரிமுத்து அமதி அடிகளின் ஓராண்டு நிறைவுத் திருப்பலி யாழ். அமலமரித் தியாகிகளின் முதல்வர் ஜீவாபோல் அமதி அடிகளின் தலைமையில் செக்கட்டித்தெரு புனித அன்னாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படுகின்றபோது.



மைக்கல் சவிரிமுத்து அமதி அடிகளின் பணிகளை நினைவுகூர்ந்து ஞாபகார்த்தமாக ஆலய முன்றலில் உள்ள நிலையம் அவர் பெயரால் அர்ப்பணிக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டு அன்னாரின் படத்திற்கு பங்குமக்களால் அஞ்சலி செலுத்தப்படும்போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 14 | 20 |
| – | – |
| 11 | 06 |
| – | – |
| 1943 | 2000 |

### செல்வி சவிரிமுத்து அருள் திரேசா (லீலா)

கருணைக் கடலாகிய இறைவா! என்றும் வாழும் தேவா!! இம் மண்ணக வாழ்வின் பயணத்தை நிறைவுசெய்து உம்பாதம் வந்துள்ள சகோதரி சவிரிமுத்து அருள்திரேசாவிற்கு உமது இன்ப வான்வீட்டில் இடமளித்தருளும்.

இவ்வுலக வாழ்வில் இவர் செய்த குற்றம் குறைகளை உமது பேரிரக்கத்தால் மன்னித்து உமது உயிர்ப்பின் மாட்சிமையில் பங்குபெற கருணை கூர்ந்தருளும்.

**அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 20-06-2001 புதன்கிழமை காலை 6.30 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.**

இவரின் பிரிவால் துயருறும்

**386 பாங்ஷால் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

*தாய், சகோதர,*
*சகோதரி*

## பொதுநிலையினருக்கான வேதாகம கற்றல் வகுப்பு

யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழுவினால் ஒழுங்குசெய்யப்படும் மேற்படி வகுப்புகளுக்கு ஆர்வமுள்ள பொது நிலையினர் விண்ணப்பிக்கலாம்.

**காலம் :~** **30-06-2001 தொடக்கம் 6 மாத காலத்திற்கு ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும்**

**நேரம் :~** **மு.ப. 9.30 பி.ப. 4.00மணி வரை (மதிய போசன இடைவேளை 30நிமிடம்)**

**கட்டணம்:~ மாதாந்தம் ரூபா 50/=**

**கல்வித் தகைமை:~** 1. G.C.E. (O/L) *கிறிஸ்தவம்* ஒரு பாடமாக எடுத்திருக்க வேண்டும்.

2. மேற்படி தகைமை பெற்றிராத வளர்ந்தோர் வேதாகமக் கல்வியில் ஆர்வமும் நன்கு எழுத வாசிக்கக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பப் படிவங்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய இடம்**

**1. பங்குத்தந்தை,**
**2. அருள்திரு ஆர். எச். சகாயநாயகம், ஆயர் இல்லம்.**

விண்ணப்பங்கள் பங்குத்தந்தையரால் சிபாரிசு செய்யப்பட்டு **20.06.2001**க்கு முன்பாக தலைவர், பொதுநிலையினர் ஆணைக் குழு, த.பெ. இல. 2, ஆயர் இல்லம், யாழ்ப்பாணம் என்ற முக வரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். பயிற்சி முடிவில் சான்றி தழ்கள் வழங்கப்படும்.

*செயலாளர்*

## 1ம் வருட நெஞ்சகலா நினைவலைகள்



### நீ. யோசவ் ஆசீர்வாதம்

(கரம்பொன்)

“சீவியத்தில் நேசித்தவர்களே, மரணத்திலும் என்னை மறவாதீர்கள்”

**இரக்கத்தின் தந்தையே இவ்வுலக வாழ்வை முடித்து உமது சந்நிதானம் வந்துள்ள உமது அடியான் யோசவ் ஆசீர்வாதம் தனது மனித பலவீனத்தால் கட்டிக்கொண்ட அனைத்து பாவங்களையும், உமது பேரிரக்கத்தால் மன்னித்து, உமது பேரின்ப வீட்டில் இட மளித்தருள வேண்டுகிறோம்.**

ஆண்டொன்று ஆனது அப்பா ஆற முடியவில்லை,
கண்மூடி முழிப்பதற்குள் எல்லாம் முடிந்தது அப்பா,
ஆதரிக்க உறவு பல அன்புசெய்ய உள்ளம் பல,
ஆனாலும் அப்பா உங்கள் அன்பு போலாகுமா? அப்பா,
இறைசித்தம் இதுவென்றால் ஏற்கத்தான் வேண்டும்,
ஆனாலும் உள்ளம் ஏற்க மறுக்குதப்பா,
சீவியம் போல் மரணம், அதை மெய்ப்பித்து விட்டீர்கள்,
அப்பா, எம் இதயத் துடிப்புள்ளவரை அகலாதப்பா,
உங்கள் நினைவு பொங்கிவரும் வேதனையை கண்ணீரில்காணிக்கையாக்கி,
இறைதாள் சேர்ந்திட வேண்டுகிறோம். அப்பா,
உங்கட்காய் நிதமும்...

*அன்புடன்*
**மனைவி, பிள்ளைகள்**

## புனித யூதாததேயு திருவிழா

இளவாலை புனித யூதா ததேயு ஆலய திருவிழாவானது 20.04.2001 அன்று மாலை 5.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 9நாள் தியானங் களுடன் 29.04.2001 அன்று காலை 7.00 மணிக்கு திருவிழா திருப்பலியுடன் நிறைவுபெற் றது. திருவிழாத் திருப்பலி எம் பங்கு மைந்தனும் எமது பங்கின் முதல் குருமணியான அன்ரன் ஜோர்ஜ் அடிகளாரினால் ஒப்புக் கொடுக்கப்பட்டது. அன்றைய திருவிழா எமது பங்கு மைந் தனின் முதலாவது திருவிழா திருப்பலி என்பதும் குறிப்பிடத் தக்கது.

## 24ம் வருட நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1907 | 1977 |
| – | – |
| 07 | 05 |
| – | – |
| 25 | 31 |

### திருமதி சிசிலியா சவிரிமுத்து

“உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்” (அரு.11:25)

அன்னாரின் நினைவையொட்டி புனித மரியன்னை பேராலயத்தில் 2001.05.31 வியாழக்கிழமை அன்று காலை 6.30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

*பிரிவால் துயருறும்*

இல.48டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்.

**மக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

## 1ம் வருட நினைவஞ்சலி

28.06.2001



### அருள்திரு ஜே.பி. ஜெறோம்

ஜே.பி. ஜெறோம் அடிகளார் புனித சூசையப்பர் துறவற சபையில் இணைந்து 40 வருடங்கள் அருட்சகோதரனாகவும், ஆசிரியராகவும் பணியாற்றி பின்னர் 20 வருடங்கள் அரும் பணியாற்றினார்.

அன்னார் கண் சத்திர சிகிச்சைக்காக வெளிநாடு சென்றபோது இங்கிலாந்தில் 28.06.2001 அன்று இறைபதம் எய்தினார்.

*நாரந்தனை மண்ணிலே;*
*நலன்மிகு பெற்றோரிடையேயுதித்து*
*நற்பரன் இயேசுவின் சேவைக்கே*
*நலமுடன் தமையே அர்ப்பணித்து*
*நானிலத்தில் இறைபணியாற்றிய குருமணி இவர்*
*நன்னிலத்தில் வீழ்ந்த வித்தாகி*
*நற்பணிகள் பல ஆற்றி*
*நாதன் உம் பதம் வந்த இவரை*
*நலன்மிகு விண்ணக இன்பத்தில்*
*நனிதே இணைக்க இறைவா உம்மை இறைஞ்சுகிறோம்.*

**386 பாங்ஷால் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

*சகோதர, சகோதரிகள்,*
*உற்றார், உறவினர்,*
*வில்லி ஐயாத்துரை பிள்ளைகள்*

## திருமறைக் கலாமன்றத்தின் தமிழ்விழா

### இறுதிநாள் நிகழ்வு

யாழ். திருமறைக் கலாமன்றம் கடந்த 05.05.2001 ஆம் திகதி முதல் 13.05.2001 வரை தமிழுக்கு விழா எடுத்து வந்தது நாம் அறிந்ததே. இந்தத் தமிழ்விழாவில் கொழும்பு திருமறைக் கலாமன்றம், ஹப்புத்தலை திருமறைக் கலாமன்றம். திருகோணமலைத் திருமறைக் கலா மன்றம் ஆகியன பங்கேற்கின்றன. இத் தமிழ் விழாவானது 5ம் திகதிமுதல் 11ம் திகதிவரை யாழ். திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெற்றது. 12ம் திகதி யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்றது. 13ம் திகதி இந்தநாள் இள வாலைத் திருமறைக் கலாமன்றம் புனித கென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இளவாலை திருமறைக்கலாமன்றம் நடாத்திய தமிழ் விழாவில் திருமறைக் கலாமன்ற இயக்குநர் மரியசேவியர் அடிகளார் பிரதம விருந்தி னராகவும், அருள்திரு யஸ்ரின் B. ஞானப் பிரகாசம் சிறப்புவிருந்தினராகவும் கலந்து கொண்டு இறுதிநாள் விழாவைச் சிறப்பித்தனர். இந்நிகழ்வில் “கலைஞர் கள் தமது கலைத்திறன் கலை உணர்வு மூலம் திருச்சபைக்கும் சமூகத்திற்கும் தம்மாலான சிறந்த பணிகளைச் செய்து வருகின்றார்கள்” என்று விழாவில் பிரதம விருந்தினர் குறிப்பிட்டார்.

தமிழ்விழா கலை நிகழ்வுகளில் ஹப்புத்தலை திருமறைக் கலாமன்றத் தின் “நிலவுக்குள் ஒரு அமாவாசை” என்ற நாடகமும், கொழும்பு திருமறைக் கலாமன்றத்தின் “கீறல்கள்” என்ற நாட கமும், திருகோணமலைத் திருமறைக் கலாமன்றத்தின் “பொறி” என்ற இசை நாடகமும், இளவாலை திருமறைக் கலாமன்றத்தின் “மன்னிப்பு” என்ற சிந்துநடைக் கூத்தும், இறுதியாக யாழ். திருமறைக் கலாமன்றத்தின் “முத்தா?, மாணிக்கமா?” என்ற நாட்டுக்கூத்தும் அன்றைய தமிழ் விழாவை இளவாலை மண்ணில் சிறப்பித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LIBRARY
-2 AUG 2001



## வீடியோ படக் கசற்றுக்கள்

யாழ். மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழுவினால் கத்தோலிக்க வீடியோ கசற்றுக்கள் வாடகைக்கு விடப்படுவது வாசகர்கள் அறிந்ததே. தற்போது பல புதிய கசற்றுக்களை சேர்த்துக்கொள்ளவும் கைவசமுள்ள கசற்றுக்களின் விபரங்களை வெளிவிடவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிலையத்தில் பலரின் நன்மைக்காகவும் நாம் பதிந்து வைக்கக்கூடிய நல்ல கசற்றுக்களை வைத்திருக்கும் குருக்கள், கன்னியர், பொதுநிலையினரிடமிருந்து அவை பற்றிய விபரத்தை வேண்டுகின்றோம். அவற்றை நாம் பிரதி செய்து வைக்கும்போது பலருக்கும் பார்ப்பதற்கு வசதியாகும்.

ஒரு வீடியோ கசற்றுக்கான ஒருநாள் வாடகை ரூ. 20 ஆகும். இவற்றை புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## பாதுகாவலன் 125வது ஆண்டு மலர் தேவைப்படுவோருக்கு

யூலை மாதத்தில் வெளிவர இருக்கின்ற பாதுகாவலன் 125 ஆண்டு மலரினை பெற்றுக் கொள்ள விரும்புவோர் தயவு செய்து நேரகாலத்தோடு கடிதம் மூலமாகவோ நேரடியாகவோ பாதுகாவலன் பணிமனையில் பதிவுசெய்து கொள்வது விரும்பத்தக்கதாகும். ஒரு பிரதியின் விலை 100 ரூபா மட்டுமே.

## பாதுகாவலனுக்கு ஆயரின் வாழ்த்து!

இன்று பல்வேறு பத்திரிகைகள் வண்ண வண்ணப் படங்களுடன் கவர்ச்சியான தோற்றங்களிலும் பல பக்கங்களிலும் வெளிவரும்போது எமது யாழ். மண்ணின் நீண்டகாலப் பாரம்பரியத்தைக் கொண்ட கத்தோலிக்க பத்திரிகையான பாதுகாவலன் சிறந்த வடிவமைப்பிற்கான பத்திரிகையாளர் சங்கத்தின் பாராட்டையும் பரிசையும் பெற்றது மிக மகிழ்ச்சிக்குள்ளாக்கும் பெருமிதத்துக்குரிய விடயமாகும். எனவே பாதுகாவலனின் பணி மேலும் சிறப்புற்று மறைக்கும் மண்ணுக்கும் நீண்டகாலம் சேவைபுரிய வாழ்த்துகிறேன்.

## பாப்பரசருக்கு 81 வயது



95கோடி கத்தோலிக்க மக்களின் ஆன்மீகத் தலைவர் பாப்பரசர் 2ம் அருளப்பர் சின்னப்பர் தமது 81வது பிறந்தநாளை மே மாதம் 18ம் திகதி 2001 ஆம் ஆண்டு கொண்டாடினார்.

1978ல் பணியேற்று கடந்த 23வருடங்களாக இவர் பாப்பரசராக பணியாற்றுவது குறிப்பிடத்தக்கது. யாழ். ஆயர், குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் சார்பாக எமது செபங்களையும் வாழ்த்துக்களையும் திருத்தந்தைக்கு தெரிவிக்கிறோம்.

# அருள்தந்தை அபே கொஸ்தா படுகொலை!

## நீர்கொழும்பு கத்தோலிக்க மக்கள் அதிர்ச்சியில்

- **கொழும்பு மறைமாவட்ட கத்தோலிக்க ஒன்றியம் கொஸ்தா அடிகளின் கொடூரக் கொலையை வன்மையாகக் கண்டித்துள்ளது.**
- **வன்முறையை எதிர்த்து ஆனி 3ம் திகதி நீர்கொழும்பு புனித பேதுரு வானவர் மைதானத்தில் (St. Peter's ground) பகிரங்க செப வழிபாடு.**

கடந்த 11ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட நீர்கொழும்பு புனித சூசையப்பர் ஆலயப் பங்குத்தந்தை அல்பிரட் பேணாட் கொஸ்தா அடிகளாரது இறுதிச் சடங்குகள் போளவலானையில் இடம்பெற்றன. ஏராளமான குருக்கள், துறவியருடன் பேராயரும் பதுளை ஆயர் மேதகு வின்ஸ்டன் பெர்ணான்டோ, குருநாகல் ஆயர் மேதகு ரேமண்ட் பீரிஸ், கொழும்பு துணைஆயர் ஆகியோரும் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டனர்.

அருள்தந்தை கொஸ்தா தமது குருமனையில் இனந்தெரியாத சில நபர்களால் கடுமையாக தாக்கிக் கொலை செய்யப்பட்டிருந்தார். அவரது உடலில் 27 காயங்கள் காணப்பட்டன. சமுதாயச் சீர்கேடுகளையும் சமூக அநீதிகள், ஊழல்களையும் எதிர்த்து அவர் குரலெழுப்பியதனால் சீற்றம் கொண்ட சிலரே இக் கொலைக்கு காரணமாயிருக்க வேண்டுமென நம்பப்படுகின்றது.

அவரது மரணச் சடங்கில் உரையாற்றிய பேராயர் தாம் அவரோடு குருமடத்தில் பயின்றநாட்களை நினைவுகூர்ந்தார். அவரது ஆன்மீக, ஒழுக்கப் பண்புகள் கண்டோரைக் கவர்ந்தன என்றும், ஆழ்ந்த மனவுறுதியும் சுயபரித்தியாகமும் கொண்ட இவர் தீமைகளைக் கண்டித்ததால் கிறிஸ்துவைப் போல் தமது உயிரையே கொடுக்க நேர்ந்தது என்றும் கூறினார்.

அருள்தந்தை கொஸ்தா தமது வாழ்நாளில் செய்த பணிகளை பிதா பென்சிறி பெரேரா எடுத்துக் கூறினார். பங்குத்தந்தை என்ற முறையில் அவர் தமது முழுக் கவனத்தையும் பங்குமக்கள் மீதே செலுத்தினார். தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட எல்லாப் பங்குகளையும் அவர் ஆன்மீக ரீதியாகவும் மறையறிவு ரீதியா–கவும் வளர்ச்சி பெறச் செய்ததுடன் ஆலயங்களையும் நன்கு பராமரித்தார் எனவும், இறைவார்த்தையை உறுதியுடனும், இறைவாக்கினரின் துணிச்சலுடனும் போதித்தார் எனவும் கூறினார்.

அருள்தந்தை கொஸ்தா தமது 22வது வயதில் குருமடத்தில் சேர்ந்தார். ஏற்கனவே பயிற்றப்பட்ட சிங்கள ஆசிரியரான அவர் ஆங்கிலம்,லத்தீன் ஆகிய மொழிகளை சிரமப்பட்டுக் கற்றுக்கொண்டார். ஆனால், சிங்கள மொழியில் பாண்டித்தியமும், சிங்கள கலாசாரத்தில் ஆழமான உணர்வும் அவருக்கிருந்தது. சிங்கள கலை, இசை ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டிருந்ததோடு ஒரு சிறந்த எழுத்தாளராகவும், நாடக ஆசிரியராகவும் இருந்தார். கிட்டத்தட்ட 50 ஆண்டுகள் குருத்துவ வாழ்வில் இறைவனுக்குப் பணிபுரிந்த இவர் மறைந்தபோது வயது 76.

# நல்லெண்ண நடவடிக்கையாக தரைவழிப் பாதையை திறக்க ஆயர் அழைப்பு

**அண்மையில் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கிளி.-முல்லை. மறைக் கோட்டத்திற்கு அருள் சகோதரர் ஜெயசீலனின் குருப்பட்ட வைபவத்திற்கு சென்றபோது தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரமுகர் சுதா அவர்களுடன் இன்றைய நிலைபற்றியும் சமாதானப் பேச்சுவார்த்தையின் மந்தநிலை பற்றியும் கலந்துரையாடினார். அவ்வேளை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரிடம் சேர்ப்பிக்குமாறு தமது மடல் ஒன்றினையும் கொடுத்தார்.**

அந்த மடலிலே யாழ். ஆயர் மேற்படி வேண்டு கோளினை விடுத்துள்ளார். அக் கடிதத்தின் முழுமையை கீழே தருகிறோம். நீண்டகாலமாக எமது தமிழ் மக்கள் இம் மண்ணில் அனுபவிக்கும் வேதனைகளைக் கண்டு நோர்வே நாட்டு அனுசரணையுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்ல நீங்கள் நல்லிணக்கம் காட்டியது பெருமைக்குரியதும் பாராட்டுக்குரியதும் மகிழ்ச்சிக்குரியதுமாகும். இம் முயற்சி பௌத்த சிங்கள எதிர்ப்புக்கள் மத்தியிலும் பின்னடைவின்றி முன்னேற வேண்டுமென்பதே எமது நாளாந்த இறைவேண்ட லாகும்.

இத் தருணத்தில் ஒரு தேவையான விடயத்தை உங்கள் முக்கிய கவனத்துக்கு சமர்ப்பிக்கிறேன். கடந்த 6 வருடங்களுக்கு மேலாக ஒரு தரைவழிப் பாதையின்றி யாழ். மக்களாகிய நாம் வன்னியிலிருந்து துண்டிக்கப்பட்டவர்களாக வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். வன்னியில் வாழும் எம் உடன்பிறப்புக்களோடு எவ்வித உறவும் அற்றவர்களாய் அவர்களை மறந்து வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளோம். இப்பொழுது தென்மராட்சியையும் இழந்தவர்களாக குடாநாட்டின் ஒரு சிறிய பகுதிக்குள்ளேயே அனைவரும் வாழவேண்டிய இக்கட்டான சூழ்நிலை எங்கள் துன்பங்களை இன்னும் அதிகரித்துள்ளது.

இந்நிலையில் வன்னி வாழ் மக்களான எமது உறவுகளை மீண்டும் ஏற்படுத்தவும் சிதைந்துபோன எமது பொருளாதாரத்தை மேம்படுத்தவும் மிக அவசியமான ஒரு தரைவழிப்பாதையை திறந்து அமைத்துத் தரும்படி தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

குறிப்பாக கேரதீவு சங்குப்பிட்டிப் பாதையை மீண்டும் போக்குவரத்துக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஐக்கிய நாட்டு அமைப்புக்களின் உதவியுடன் திறந்துவைக்க முடியும். சமாதானத்துக்கான பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கு தாங்கள் நல்லிணக்கம் காட்டியிருக்கும் இத்தருணத்தில் மேற்கூறிய தரைவழிப் பாதையை திறப்பது ஒரு நம்பிக்கை தரும் நல்லெண்ண முயற்சியாகும். இதற்கு அரசாங்கமும் இராணுவமும் ஒத்துழைக்கும் என நம்பிக்கை எமக்குண்டு. எனவே எமது வேண்டுகோளை பரிசீலித்து அதை நிறைவேற்ற ஆவண செய்யுமாறு வேண்டுகிறேன்.

# வத்திக்கான் மறைபரப்பு செயலக தலைவர் மாற்றம் — புதிய செயலராக கருதினால் செப்பே

மறைபரப்பு நாடுகளின் செயலகமாக வத்திக்கானில் இயங்கும் மறைபரப்புச் செயலகத்தின் (Sacred Congregation for the Propagation) தலைவர் கருதினால் ஜோசப் ரொம்கோ (Cardinal Josef Tomko) ஓய்வுபெற்றார். அவருக்குப் பதிலாக புதிதாக கருதினாலாக அண்மையில் உயர்த்தப்பெற்ற கருதினால் செப்பே (Cardinal Sepe) அவர்களை திருத்தந்தை நியமித்துள்ளார். கடந்தசில ஆண்டுகளாக வத்திக்கானில் மாபெரும் யூபிலிக் கொண்டாட்டங்களை திட்டமிட்டு சிறப்பாக செயல்படுத்தியவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஏப்ரல் 17ந் திகதி இந்த நியமனத்தை வத்திக்கான் வெளியிட்டது.

## புதிய நியமனங்கள்

மனிதமுன்னேற்ற நடு நிலையத்தின் கிளி.–முல்லை. மறைக்கோட்ட பிரதிநிதியாக செயற்பட்ட தவராஜசிங்கம் அடிகள் மேற்படிப்புக்காக கனடா செல்லவிருப்பதால் அவ்விடத்திற்கு இ. சூசைநாதன் அடிகள் நியமிக்கப்பட்டுள்ளார்.

தனது இருதய சத்திர சிகிச்சையை முடித்துக்கொண்ட ஜேம்ஸ் பத்திநாதர் அடிகள் மீண்டும் உருத்திரபுரம் D8 ஆரோபனம் மாணவர் இல்லத்தை புனரமைப்பு செய்து பணிகளை ஆரம்பித்துள்ளார். அவருக்குதவியாக அமலதாஸ் அடிகள் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறையில் பணியாற்றிய யூட் நிக்சன் அடிகளார் தர்மபுரம் பங்கிற்கு மாற்றலாகி கிளி.–முல்லை. மறைக்கோட்டத்திற்கு சென்றுள்ளார்.

## அ.ம.தி.களின் புதிய நியமனங்கள்

அருள்திரு லீனஸ் சொய்சா சமூகதொடர்புப் பணி பொறுப்பாளராகவும் அருள்திரு ஜெறோம் லம்பேட் வவுனியா அ.ம.தி மறையுரைஞர்கள் குழுத் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். அருள்திரு எவ். தேவராஜா, யோகராஜா, அமலதாஸ் ஆகியோர் மறையுரைப் பணிபுரிவர். அருள்திரு பா.ஜெயபாலன் கப்புத்தளை துணைப் பங்குத்தந்தையாகவும் அருள்திரு அல்றின் நுவரெலியா – பாதினாவெல பங்குத்தந்தையாகவும் அருள்திரு சந்திரபோஸ் அமதிபுரம் பங்குத்தந்தையாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஸ்ரனிஸ்லோஸ் அடிகள் இடம் பெயர்ந்தோர் பணியினை யாழ். நகரில் மேற்கொள்ளவுள்ளார்.

## பாசையூர் அந்தோனியார் திருவிழா

பாசையூர் புனித அந்தோனியார் ஆலய 151வது ஆண்டுத் திருநாள் திருப்பலி ஜூன் 13 காலை 7மணிக்கு ஆயர் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும். இத் திருப்பலி யாழ். சமூகத் தொடர்பு ஆணைக்குழுவின் ஒழுங்கமைப்பில் யாழ். சேவையில் நேரடி ஒலிபரப்புச் செய்யப்படும். *புனித அந்தோனியார் ஆலய சிறப்பு மலரினை அடுத்த பாதுகாவலனில் எதிர்பாருங்கள்.*

## அருள்திரு எஸ். என். அருள்நேசன் அ.ம.தி வைரவிழா

யூன் மாதம் 12ம் திகதி 1941ம் ஆண்டு குருப்பட்டம் பெற்ற சில்லாலையைச் சேர்ந்த எஸ். என். அருள்நேசன் அடிகளார் தனது குருத்துவ வைரவிழாவினை 12 யூன் 2001ம் ஆண்டு கொழும்பில் கொண்டாடினார். இவர் புனித பத்திரிசியார் கல்லூரியின் முதல் சுதேச அதிபராக 1954–1960 வரை பணியாற்றியவராவார்.

தம் குருத்துவத்தின் முதல் 20 ஆண்டுகள் யாழ். மறைமாவட்டத்தில் பணியாற்றிய இவருக்கு யாழ். மறைமாவட்ட ஆயர், குருக்களின், வாழ்த்துக்களையும் செபங்களையும் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் செல்வராஜா அடிகள் அண்மையில் அனுப்பிவைத்தார்.

இப் பத்திரிகை புனிதவளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360 பிரதான வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் ஒவ்செற் முறையில் 2001ம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது. P.197. T.P. No. 2378

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org